Registered No. M. 878.

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதாநியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மக்ஞாநக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கில௴
15௳யில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 4. } 1913௵ அக்டோபர்௴ 15௳ / பிரமாதீச௵ புரட்டாசி௴ 30௳ { பகுதி 6.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கசாமி ஐயர், B. A., B. L., F. T. S.
} பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ. 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

# பொருளடக்கம்.

## (CONTENTS.)


| | | |
|---|---|---|
| 1. | மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரின் 66-வது ஆண்டு நிறைவு—அ. ரங்கஸ்வாமி ஐயர் | 185 |
| | The Sixty-sixth anniversary of Mrs. Annie Besant's Birth-day—A. Rangaswami Iyer | |
| 2. | பிதகோராஸ் என்பவரின் சரித்திரம்—ப. நாராயண ஐயர் | 191 |
| | Life of Pythagoras—P. Narayana Iyer | |
| 3. | மரணபயம் வேண்டாம்—ப. நாராயண ஐயர். | 198 |
| | Fear not death—P. Narayana Iyer. | |
| 4. | கர்மம்—இசக்கியாடும் பெருமாள் பிள்ளை. | 205 |
| | Karma—Esakiadum Perumal Pillai. | |
| 5. | துகாராம் பாவாவின் சரித்திரம்—அ. சிவராவ். | 209 |
| | Life of TukaramBaba—A. Siva Rao. | |
| 6. | பிரஹ்மக்ஞானதர்சநம் (பாலபாடம்) வி. வெங்குசாமி ஐயர் | 217 |
| | Elements of Theosophy—V. Vengusamy Iyer. | |
| 7. | பெரியார்மாட்டு தீமை செய்ய நினைத்தல் தனக்கே துன்பம் தரும்—ஆர் சுந்தரராஜ ஐயர் | 219 |
| | To try to work evil towards the great ones will result in one's own destruction—R. Sundararajier | |
| 8. | புத்தகவரவு—பத்திராதிபர். | 221 |
| | Review of books—Editor. | |
| 9. | சமாசாரம்—பத்திராதிபர். | 223 |
| | News—Editor. | |


---


ஐந்து ஸஞ்சிகைகள் வெளியாய் விட்டன.

## பக்தமாலா வசனம்.

ஸ்ரீ சாது பாலகிருஷ்ண முதலியாரால் மகாராஷ்டிர பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இதை வாசிப்பதினால் தெய்வ பக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலியன இருபாலர்க்கும் செவ்வனே உண்டாகும். இதில் 182 சிறந்த பக்தர்களின் சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இச் சரித்திரங்களிலுள்ள விஷயங்களை ஒவ்வொருவரும் வாசித்துத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இது டிம்மி 8 பாரங்கொண்ட ஸஞ்சிகை வடிவமாய் 12 ஸஞ்சிகையில் முடிவுபெறும். சொற்ப காப்பிகளே அச்சடித்து வருகிறமாகையால் வேண்டியவர்கள் உடனே எழுதிப்பெற்றுக் கொள்ளவும். 12 ஸஞ்சிகைகளும் முடிந்து ஒரே புஸ்தகமாய் அனுப்பும்பொழுது அதன்விலை வி. பி. சார்ஜ் உள்பட ரூபா 4. ஆகையால் இப்பொழுதே ஆர்டர்செய்துகொள்ளுங்கள்

**சந்தா விவரம்.**

| | |
|---|---|
| 12 ஸஞ்சிகைக்கு முன் பணமாக வி. பி. சார்சு உள்பட | ரூ 2—12-0 |
| சந்தாதார்களின் சௌக்கியத்தை உத்தேசித்து இரண்டு தடவையாக வி. பி யிலனுப்ப சந்தா | ரூ 1—7—0 |

Apply to—மானேஜர், 'பக்தமாலா' ஆபீஸ்,
107, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 4. | 1913௵ அக்டோபர்௴ 15௳ பிரமாதீச௵ புரட்டாசி௴ 30௳ | பகுதி 6.

## மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மையாரின் 66-வது ஆண்டு நிறைவு

நமது பிரஹ்மஜ்ஞானசபையின் அக்ராசனத்தைச் சிறப்புற்று வகித்துவரும் மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மையாருக்கு இம்மாஸம் முதல்தேதியில் 66-வயது முடிந்து 67-வது ஆண்டு ஆரம்பித்தது. இதுவரையில் அவர்களுடைய ஆயுளில் சென்ற வருடங்கள் மானிடர்களின் க்ஷேமத்தைக் கருதி உலகத்தின் பல தேசங்களிலும், பிரதானமாய் இங்கிலாந்திலும், நமது இந்தியாவிலும், வியக்கத்தக்க சிரத்தையுடனும் விடா முயற்சியுடனும் அர்ப்பணம் செய்யப்பட்டனவாய் விளங்குகின்றன. அவர்களுடைய ஜன்மதேசமாகிய இங்கிலாந்தில் ஜநங்களுடைய பொதுநன்மைக்கு அநுகுணமான எல்லாக் காரியங்களிலும் பிரவிர்த்தித்து ஸத்தியத்தை உலகத்தில் அதிசிரேஷ்டமான தனமாகக் கைக்கொண்டு, அதை நாடுவதில் உண்டாகும் எல்லாக் கஷ்டங்களையும் துக்கங்களையும் பொறுமையுடன் அநுபவித்து, நமது ஸநாதன மதத்திற்கு ஆதாரபூதமாய் விளங்குகின்ற மஹரிஷிகளின் பிரஸாதத்தாலும் பூர்வ

கர்மவிசேஷத்தாலும் பிரஹ்மவித்யையின் பிரபாவத்தை உணர்ந்து அதை உலகமெங்கும் பரவச்செய்வதையே தம்முடைய முதல் கைங்கர்யமாக ஏற்றுக்கொண்டு இந்தப் புண்யபூமியாகிய பரதகண்டத்தை உஜ்ஜீவனம் செய்யும்பொருட்டு 1893-ம் ஷூ த்தில் இத்தேசத்திற்கு வந்தனர்.

அந் நாள்முதல் இதுபரியந்தம் அவர்கள் நம் தேசத்திற்குச் செய்திருக்கும் நன்மைக்கு நாம் கைம்மாறுசெய்ய வலிமையற்றவர்களாயிருக்கிறோம். அவர்களுடைய வேலைகளை எவர்கள்தான் அறியமாட்டார்கள்! இந்து தேசத்தின்கண் பொது நன்மைக்காக உழைப்பவர்களுக்குள் அவர்கள் சிரேஷ்டமான ஸ்தானத்தை வஹிக்கிறார்கள். அநேக ஜந்மங்களில் இந்தப் பூமியில் ஜநித்து, நமது மதம், ஆசாரம், நாகரிகம், சாஸ்திரங்களின் தத்துவார்த்தம் இவைகளை அறிந்த அம்மையார் இந்தத் தேசத்தை, இந்த ஜந்மத்தில் தம்முடைய இரண்டாம் ஜந்மபூமியாகக் கைக்கொண்டது ஒரு ஆச்சரியமான விஷயமல்ல. அவர்கள் கைக்கொள்ளும் எவ் விஷயமும் அரைகுறையாய்க் கைக்கொள்ளத்தக்கதல்ல என்பது நம்மெல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகையாலவர்கள் சென்ற 20 வருஷகாலமாய் இத்தேசத்தில் செய்திருக்கும் காரியங்கள் நம்மவரில் மற்றவர்கள் அநேக ஜந்மங்களாய்ச் செய்யத்தக்க விஷயங்களைக் காட்டிலும் அதிகரித்துள்ளன.

ஒரு தேசத்திலுள்ள ஜநங்கள் இகபரசுகத்தையும் க்ஷேமத்தையும் விரும்புங்கால், அத் தேசஸ்தர்கள் எந்த வழியினாலேயாவது (அவ்வழி ஸந்மார்க்கத்தை அநுஸரித்ததாயினும் சரி அல்லது தீயநெறிபற்றியதாயினும் சரி) ஐசுவரியத்தை ஸம்பாதிக்கவேண்டுமென்றதில்மாத்திரம் தீவிரபுத்தியைக் கொண்டார்களேயானால் அது அவர்களுக்கு இவ்வுலகத்தில் க்ஷேமத்தைக் கொடுக்கமாட்டாது, பரலோகத்திலும் நல்ல கதியைக் கொடுக்கத் தக்கதல்ல என்பது நம்முடைய பிராசீன கொள்கை. ஆகையால் ஒரு ஜாதியார் இஹபரசுகத்தையும் க்ஷேமத்தையும் கருதினால் அவர்கள் நான்கு விஷயங்களைக் கவனிக்கவேண்டியது.

(1) ஆத்ம வித்தையைக் கைக்கொள்ளுதல். அதை யநுஸரித்த தெய்வபக்தியை யடைதல். ஈசுவரனுடைய ஸாமீப்பத்தை யடையத்தக்க வழியைத் தேடுதல்.

(2) விவேகத்தை விளங்கச்செய்ய ஸர்வ சாஸ்திரங்களையும் ஆராய்ந்து கல்விகளில் தேர்ச்சியடைதல்.

(3) ஈகை, கருணை, சாந்தம், தேசாபிமானம் முதலிய நல்ல குணங்களை விருத்திசெய்தல்.

(4) சரீர ஆரோக்கியம், அதற்கு ஸாதகமான பொருள் ஸம்பாதித்தல், அதற்கு உரிய தொழில்களைக் கற்றல், அதற்கு ஆதாரவாக ஆசாரங்களைச் சீர்திருத்தல், ஜனங்களுக்குள் நிகழும் துவேஷத்தை விலக்கி ஐக்யபாவத்தை அதிகரித்தல், சுகத்துக்கும் சாஸ்திரத்துக்கும் விருத்தமில்லாத வழிகளைத் தேடுதல்.

மேற்கூறிய நாலுவழிகளும் அவைகள் கூறப்பட்டிருக்கும் வரிசைக் கிரமத்தை அநுஸரித்தே ஒன்றுக்கு மற்றொன்று கீழ்த்தரமானது என்ற தாரதம்யத்துடன் மேன்மையை யடைந்திருக்கின்றன. இது சரித்திர ஆராய்ச்சியினால் நன்கு விளங்கும். ஒருகாலத்தில் ஒரு ஜாதியார் உயர்வை யடைந்திருப்பதற்குக் காரணம் யாதென நாம் விசாரிக்குங்கால் அவர்கள் மேற்சொல்லிய நான்குவழிகளிலும் பிரவிர்த்தித்து நியாயத்திற்கும் ஒழுங்குக்கும் புறம்பல்லாத இஹபர மேன்மையை அடைந்தார்களென்றே நமக்கு நன்றாகப் புலப்படும்.

மேல் விவரிக்கப்பட்ட கொள்கைகள் நம்முடைய முன்னோர்களால் எவ்வாறு கைக்கொள்ளப்பட்டனவோ; அவ்வாறு மேற்றிசையாரால் கைக்கொள்ளப்படவில்லை. ஆகையால், அக்கொள்கைகள் எவ்வளவு காலம் நம் இந்தியாவில் நேர்மையாக அநுஷ்டிக்கப்பெற்று வந்தனவோ, அவ்வளவு காலம் இத்தேசமானது பூமியின் ஒரு திலகம்போல விளங்கிற்று. அவ்வநுஷ்டானம் அநேக ஆயிரம் வருஷங்களாய் நந்தேசத்தில் நடைபெற்றது. எப்போது அக்கொள்கைகள் இத்தேசத்தில் கைக்கொள்ளத் தவறிவிடப்பட்டனவோ, அப்பொழுதே இத்தேசம் க்ஷீணதசையை அடையத் தொடங்-

கிற்று. மறுபடியும் பழைய ஸ்திதியை வகிக்கவேண்டுமானால், அக் கொள்கைகளைக் கைக்கொண்டு அம்முறையில் சென்றாலொழிய வேறு வழி இல்லை. மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மையார் இத்தேசத்தில் கால்வைத்த காலந் தொடங்கி, அவர்கள் இவ்விஷயத்தை முறையிட்டுக்கொண்டு வந்தனர். ஒரு தேசத்தின் சீர்திருத்தத்திற்கு, ஒரு கட்டிடத்திற்கு அஸ்திவாரம் எவ்வாறோ, அவ்வாறு ஆதாரம் வேண்டும். அப் பலமான ஆதாரம் யாதெனில்:—ஈசுவரனை வழிபடுதலும், சரீரங்களைக் காட்டிலும் ஆத்மா வேறு என்றறிதலும், அவ்வாத்மாவை யறிதலும், அதாவது தன்னைத்தான் அறிதலுமாம். பிரஹ்மக்ஞாந ஸபை இந்தியாவிற்கு வருமுன்னர் இத்தேசத்தில் இங்கிலீஷ் படித்தவர்கள், மேற்றிசையினர் நாஸ்திகக் கொள்கைகளால் இவ்வுலகத்தில் முதன்மையை அடைந்திருக்கிறார்கள் என்ற விபரீத புத்தியை யடைந்து நாஸ்திகர்களாகுந் தன்மையை யடைந்தார்கள். அப்போது பிரஹ்மக்ஞாந ஸபை (Theosophical Society) இத்தேசத்தில் பரவி அக்கேட்டை நிவிர்த்தித்தது. மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மையாரவர்கள் இத்தேசத்திற்கு வந்தவுடன் மேற்சொல்லிய நாலு விஷயங்களில் முதலாவது விஷயத்தை இத்தேசத்தார்கள் புத்தியில் நிலைபெறப் பிரஸங்கித்தும், கிரந்தங்கள் பிரசுரஞ்செய்தும் வந்தனர். ஏனென்றால் மேற்கூறிய முதலாவது விஷயத்திற்கண்ட ஆத்ம விசாரம், ஈசுவர பக்தி இவைகள் தான் மற்ற எல்லா விஷயங்களுக்கும் மூல ஆதாரமாம்.

அதற்குப் பிறகு நம்முடைய இந்துக்களுடைய கல்விப் பயிற்சியானது கேவலம் லௌகிக முறையை யநுஸரித்து நிகழ்கிறதென்றும், ஹிந்துமத அப்யாஸம் நம்முடைய மாணவர்களுக்கு ஏற்படாத படியால் அவர்கள் நாஸ்திக நெறியைச் சார்ந்தும், அதினுடைய தோஷங்களைக் கைக்கொள்ளக் கூடியவர்களாயும் இருக்கிறார்களென்றும் அறிந்து, அவர்களுடைய விவேக விளக்கமும், ஸநாதன தர்மமும், இரண்டும் ஒன்றுக்கொன்று விரோதமின்றி ஒத்து விருத்தியாகும் வண்ணம் காசியில் ஹிந்து பிரதான கல்விச் சாலை (Central Hindu College) என்ற வித்யாசாலையை ஸ்தாபித்தார்கள். அவ்வித்தியாசாலையில் ஹிந்து சமயம் என்ற ஸநாதன தர்மத்தின் தத்துவார்த்தங்களைப் போதிக்கின்ற கிரந்தங்களை ஏற்படுத்தினார்கள்.

அதற்குமுன் சமய கோடிகளாய்ப் பிரிந்துள்ள இந்து மதம் என்ற மஹார்ணவத்தைக் கடக்கத் தக்க போது நூல் என்ற மரக்கலத்தை நிர்மித்தல் அஸாத்தியமென்று எண்ணினோர் அநேகர். அப்போது நூல்கள் இத்தேசத்தில் அநேக மாகாணங்களில் பரவி, அவற்றைப் பல வித்யார்த்திகள் கற்றுவருகிறார்கள்.

விவேகம் என்ற மேதையானது மநுஷ்யனுக்குள்ள ஒரு கருவியாகும். அக்கருவியை நன்மை பயக்கவும் உபயோகிக்கலாம்; பிறரை வஞ்சிக்கவும் ஸாதகமாகக் கொள்ளலாம். ஆயுதம் நல்லதென்றும் தீயதென்றும் அதன் தன்மையால் ஏற்பட்டதல்ல, அதை உபயோகிக்கும் முறையால் அதற்குக் குணவேறுபாடு ஏற்படுகிறது. ரணவைத்தியன் கையிலிருக்கிற கத்தி வியாதியைப் போக்கும், உயிரைக் கொடுக்கும்; கொலையாளியின் கையிலிருந்து உயிரை உடலினின்று வேறுபடுத்தும். ஆகையால் நற்குணம் சிறந்தது. மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மையார், இத்தேசம் மேன்மையடைகிறதாயிருந்தால் வீர்யத்தோடு பொருந்திய நற்குணமே (Force of character) முக்கியமென்றும், புத்திக் கூர்மை எவ்வளவு நுட்பமாயிருப்பினும், நற்குணம், பரோபகார சிந்தை, தயை, நியாயாபிமானம், தேசாபிமானம், ஐகமத்யம் இவைகள் ஜநங்களுக்கு உண்டாகாவிடில் தேசக்ஷேமாபிவிருத்தி துர்லபமென்றும் மேற்கூறிய மூன்றாவது விஷயத்தை பிரஹ்மஞான ஸபையாரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வித்யா சாலைகள் மூலமாயும், கிரந்தங்கள் மூலமாயும், பத்திரிகைகள் மூலமாயும், பிரஸங்கங்கள் மூலமாயும் வற்புறுத்தி வந்திருக்கின்றனர்.

நான்காவதாக, சரீரதார்ட்யம், பெண்கல்வி, பஞ்சமர் முதலான கீழாயினோரின் சீர்திருத்தம், கைத்தொழில் அபிவிருத்தி, வெளித்தேச யாத்திரை, உலகத்தின் துன்பங்களின் நிவிர்த்தியில் முயற்சித்தல், இவைகளுக்கு ஸாதகமாயிருக்கிற ஆசார சீர்திருத்தம் இவைகள் முக்கியமாய்க் கைக்கொள்ளப்பட வேண்டுமென்று நாளாவிர்த்தியில்போதித்து வந்த மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையார்

இந்திய தேசத்து தற்கால நிலைமையில் அவைகளை முக்கியமாய் அப்பியாசத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று கருதி, அதற்கு அவர்கள் தம் பூர்ண ஊக்கத்துடனும், உத்ஸாஹத்துடனும், விடா முயற்சியுடனும் பிரயத்தனம் செய்ய அவர்களுடைய 67-வது ஆண்டில் ஆரம்பித்திருக்கின்றார்கள். அவர்களுக்கு மேற்சொல்லிய விஷயங்களிலிருக்கும் உத்ஸாஹம் நம்மவரில் வாலிபர்களுக்குள்ளும் பார்ப்பது அரிது.

மேற் சொல்லிய நான்கு விஷயங்களிலும் இந்தியர்கள் மேன்மையை யடைந்தால் தான் நம்முடைய தேசமானது பிரிடிஷ் ஏக சக்ராதி பத்யத்தில் அதற்குரிய ஸ்தானத்தை வகிக்கத்தக்கது என்பது அவருடைய நிச்சயமான எண்ணம். நமது தேசம் அந்த ஸ்தானத்தை வகிக்கப் போகிற தென்றும் அவருடைய துணிபு. எல்லாத் தேசாபிமானிகளும் அம்மையாரின் எண்ணங்களை நிறைவேற்றுவார்களென்று நாம் நம்புகிறோம்.

இவ்விதமாய்ப் பலவாறாய் நமது தேசமாகிய ஆரியாவர்த்தத்தின் க்ஷேமத்திற்காகத் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்பவரும், நாம் கொண்டாடும் ரிஷிகளின் ஆக்ஞையைச் சிரமேற் கொண்டு உழைத்து வருகிறவருமான மாது ஸ்ரீ, அந்நிபெஸண்டு அம்மையார் இன்னும் அநேக ஆண்டுகள் நீடூழி இப்புவியில் வாழ்வார்களாக என்று நாம் ஈசுவரனைப் பிரார்த்திக்கின்றனம்.

ஓம்தத்ஸத்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

# பிதகோராஸ் என்பவரின் சரித்திரம்.*

1. ஒவ்வொரு ஜாதியார்க்கும் ஏற்பட்டுள்ள ராஜரிகமுறையில் கல்விப்பயிற்சி இலாகா ஏற்பட்டிருப்பதை நாம் அறிவோம். அதுபோல், பொதுப்பட உலகமுழுமையையும் அரசாளுமுறையில் கல்விப்பயிற்சி இலாகா ஒன்று உள்ளது. அதைப்பற்றி லோககுருவின் அவதாரங்கள் என்ற வியாஸத்தில் நன்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரே லோககுருவே வரிசைக்கிரமமாக, வியாஸரென்ன, ஸோராதுஷ்டிரா என்ன, ஹேர்மீஸ் என்ன, ஆர்பியஸ் என்ன, பகவான்புத்தர் என்ன, இவ்வாறான பல திருநாமங்களைப் பெற்றுப் பற்பல தேசகாலங்களில் இவ்வுலகிலவதரித்தார் என்றும், அவர் உலகத்தினர்களுக்கு நல்லுபதேசம்செய்து அவர்களை நல்வழிப்படுத்தினரென்றும், கடைசியாக வந்த கௌதமபுத்தர் தாம் வகித்துவந்த லோககுரு உத்யோகத்தைத் தம்முடைய முக்ய சிஷ்யரான மைத்ரேய மஹரிஷியிடம் ஒப்புவித்து உயர்பதவிக் கேகினரென்றும், இனி வரப்போகும் பன்னூற்றாண்டுகளில் பகவான் மைத்ரேயரே லோககுருஸ்தானத்தினின்று, உலக விகாஸமுறையில் ஸகல ஜீவர்களும் அத்யாத்மஞானத்தைப் பெற்றுய்யும் வண்ணம் உதவிபுரிவாரென்றும் படித்தோம். புத்தரைப் போலவே மைத்ரேய மஹரிஷியும் தம்முடைய பிரதம சிஷ்யரான பேர்பெற்ற பிதகோராஸ் என்ற ஞானியாரையே தம்முடைய உத்யோகத்திற்கு வார்சாக இனி நியமிப்பார். இந்த பிதகோராஸ் என்பவர் இப்போது பிரஹ்மஞானசபையை நடாத்தும் இரண்டு மஹாத்மாக்களில் ஸ்ரீ: K. H. என்பாராவார்.

2. இவர் முன்னர் அநேக ஜந்மங்களில் அநேக ஜாதியார்களுக்குக் குருவாகவும், கோவில் நம்பியாகவும், புரோஹிதராகவும் தொழில் செய்துவந்திருக்கிறார். இவைகள் இனி வரப்போகும் ஜந்மத்தில் லோககுருவாகவே அமைகிறதற்கு உற்ற பயிற்சிகள் எனக்கருதவேண்டியது. பிரகிருத வியாஸத்தில் கிரீஸ்தேசத்தில் பிதகோராஸ்ஆக அவதரித்து விளங்கிய பெருமையைப்பற்றி ஆராய்வோம்.

---

*Adapted from the "Young Citizen" Vol. I No. 2.

3. வெகு காலத்திற்கு முன்னர், நீலவர்ணமான ஈஜியன் கடலினுள்ள (Ægean sea) ஸாமாஸ் என்ற அழகிய த்வீபத்தில் நேஸார்க்காஸ் (Mnesarchos) என்றொருவர் வஸித்துவந்தார். இவர் அந் நகரவாஸிகளில் நன்கு மதிக்கப்பெற்ற கௌரவமானவர்களில் ஒரு முக்யஸ்தராகவிருந்தார். இவரது தொழில் ரத்நக்கற்களில் அதிக நுட்பமான சித்ரம் செதுக்குவதாம். இவர் இத்தொழிலில் வெகு ஸமர்த்தர். அவருடைய நுண்ணிய வேலைப்பாடமைந்த நகைகளிற்சில இக்காலத்திலுள்ளபொருட்காட்சிச்சாலைகளில் (Museums) சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன; அவைகளைக் கண்கூடாக இன்னும் பார்க்கலாம். இத் தொழில்முறையில் அவர் வெகு பாண்டித்ய முடையவராதலால் யதேஷ்டமான தநம் ஸம்பாதித்தீர். இ. மு. 592-ம் வருஷத்தில் இவருக்கு ஒரு புத்ரர் பிறந்தார். இக் குழந்தைக்கு பிதகோராஸ் என்று நாமகரணம் செய்யப்பட்டது. நேஸார்க்காஸ் தன் செல்வக் குமாரனை அக்காலத்து நலமான ஸௌகர்யங்களை யநுஸரித்து சிலாக்கியமான நற்கலைகளிற் பயில்விக்க வேண்டுமென்று கருத்துக்கொண்டார். ஸாமாஸ் தீவின் அக்காலத் தரசன் பாலிக்ரேட்ஸ் என்பவன் குற்றமில்லாத அரசன் எனச் சொல்ல முடியாது. ஆனாலும், அவன் நாநாவித கலைகளில் தேர்ச்சியடைந்த கலைஞர்களையும், கவிவாணர்களையும் பூஜ்யதையுடன் ஸம்மாநித்து ஆதரித்துவந்தான். ஆகையால் இந்த ஸமஸ்தாநத்திலேயே ஸகலகலாவல்லவர்களும் சிறந்த புத்திமான்களான தத்துவ சாஸ்திரிகளும் இருந்தார்கள். அக்காலத்தில் கிரீஸ் தேசத்தில் கல்வியும் அறிவுமுள்ள முக்ய ஸ்தாநங்களில் ஒன்றாக இந்த ஸமஸ்தாநம் விளங்கியது, இந்த ஸமஸ்தாந வித்வான்களிடமே நம் பிதகோராஸ் பயின்று வித்யாப்பாஸம் பெற்றுவந்தார். இவருக்கு முதன்முதல் கல்வி கற்றுக்கொடுத்த உபாத்தியாயர் ஹெர்மோடாமாஸ் என்ற பெபயரையுடையவர். இவர்மேல் பிதகோராஸ் பக்திசிரத்தையைபாராட்டிவந்தார். இந்த உபாத்யாயரைத் தவிர தம் தகப்பனரின் ஸ்நேஹிதர்களான அநேக கலா வல்லுனர்களிடமும் அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டார். இப்பொழுது நமக்குத் தெரிந்தமட்டில் இந்த ஸ்நேஹிதர்களில் அநாக்ரியான் (Anacreon) என்ற வித்வானும் ஐபிகஸ் (Ibycus) என்ற மஹாகவி ஒருவரும்

இருந்திருக்கிறார்கள். இத்தாலியா தேசத்தில் ரீஜியம் என்ற நகர் தான். இம் மஹாகவியின் ஸ்வதேசம். இவர் பாலிகிரேட்ஸ் அரசன் வித்வான்களை நன்கு ஆதரிக்கிறார் என்று கேள்வியுற்று ஸாமாஸ் ஸமஸ்தானத்திற்கு வந்தவர். நம் பிதகோராஸ் மற்றெல்லா வித்வான்களையும் கலைஞர்களையும் விட தம் பிதாவின் முக்ய ஸ்நேஹிதரான தியோடோராஸ் என்றவரிடமே மிகவும் அன்புபாராட்டி வந்தனர். அவரிடமே அதிக நாட்டமுடையவராக இருந்தார். தியோடோராஸ் என்பார் பெரிய கம்பீரமான சித்திர உருவங்கள் செதுக்குவதிலும், அதிநுட்பமான நகாசுவேலையிலும் ஸமர்த்தர். ஆழ்ந்த புத்திக் கூர்மையுடையவர். இவர்தான் பாலிகிரேட்ஸ் அரசனுக்குத் தன் பூர்ண வேலைத்திறமையைக் காட்டி விலைமதிக்கமுடியாத மோதிரம் ஒன்று செய்து கொடுத்தார். பிதகோராஸ் இவருடைய தொழிற்சாலையில் பயின்றுவந்தார். இவர் களிமண்ணைக்கொண்டு வெகு அழகாய்த் தேவர்களின் மூர்த்திகளை அமைக்கும் சாதுர்யத்தை ஆராய்ந்து கவனிப்பார். இவர் சித்திரவேலை கற்றுக்கொடுக்கும்போதே பிதகோராஸுக்கு அடியில்வருமாறு அடிக்கடி வற்புறுத்திச் சொல்லுவார்:—“நான் அழகாய் அமைக்கும் தேவர்களெல்லாம் நம்முடைய கற்பனையாலும், புராணங்களின் விவரணங்களாலும் வரம்புக் குட்பட்டவர்கள்; அவாங் மானஸ கோசரராயும், ஸர்வ பிரபஞ்சத்தின் ஸ்ருஷ்டிக்கும் லயத்திற்கும் காரணஸ்தராயும் உள்ள ஜகத்பிதா இத் தேவர்களைக் காட்டிலும் அதிக உயர்நலமமைந்தவர். அவரிடமிருந்து எல்லாம் வந்தன. அவரால் எல்லாம் இயங்குகின்றன. அவரிடம் எல்லாம் கடைமுறையில் திரும்பும்.”

4. பிதகோராஸின் தகப்பனர் அவர் கல்விப் பயிற்சியில் எவ்வளவு சிரத்தை யெடுத்துக் கொண்டாரோ, அவ்வளவு சிரத்தையுடனே நம்முடைய இளைஞரும் கல்வி கற்று வந்தார். இவர் முகத்தில் இவருடைய புத்திமலர்ச்சியின் தேஜஸ் ஜ்வலித்தது. இவருடைய உபாத்தியாயர்கள் எல்லோரும் இவரது புத்திசாலித்தனத்தைக் கண்டு மெச்சினர்கள். அவர் பயின்ற வித்தையின் முறைக்கும், இக்காலத்து வித்தையின் முறைக்கும் அதிக வித்யாஸமுண்டு. முதன் முதல் அவருக்குக் கவிகளையும் காநசாஸ்திரத்தையும் கற்பித்

தார்கள். பால்ய காலத்திலேயே அவர் ஏழு தந்திகளுடைய லயர் (Lyre) என்ற வாத்யத்தை வாசித்தலில் பழகித் தேர்ந்தவர். வாத்யத்தின் காநத்திற்கிசைய கவிகள் பாடுவதற்கும் பயின்று வந்தார். இவ்விரண்டு கலைகளிலும் பூர்ண ஞாநம் பெற்ற பிறகு கணித சாஸ்திரத்தைக் கற்றார். இந்த சாஸ்திரத்திலும் பாரங்கதராகி தம் உபாத்தியாயர்களையும் விட அகன்ற பிரக்ஞையை உடையவரானார். இப்போது வழங்கும் யூக்லிட் (Euclid) முதலாவது பகுதி, 47-வது விஷயத்தை (Proposition) இவர் அழகாய் நிரூபணம் செய்தார். ஏட்டுப்படிப்புடன் மட்டும் திருப்தி கொள்ளாமல் உலக விஷயங்களிலும் அகன்ற அநுபவம் பெறவேண்டுமெனக் கருதி அநேக வருஷங்கள் யாத்திரை செய்தார். எகிப்து, பிரீஷியா, கால்டியா, பாரஸீகம், பழைய ஞாந பூமியாகிய பாரதவர்ஷம் என்ற நம் இந்தியா தேசம் முதலிய பிரதேசங்களிலெல்லாம் ஞாந யாத்திரை செய்தனர். அக் காலத்திலேயே ஞாந முறைகளுக்கு இருப்பிடமாக இந்தியா தேசம் பேர் பெற்றிருந்தது. இன்ன காலத்தில் இந்தியா தேசம் ஞாநபூமியாக ஏற்பட்டது என்பது சொல்லக் கூடவில்லை. அவ்விஷயத்தில் அது மிகவும் பழமையான தேசம். பிதகோராஸ் எகிப்து தேசத்தில் பிரஹ்மாண்டமான கோவில்களின் கண் ஞாநாசார்யர்களிடம் 22 வருஷகாலம் உறவாடி சிஷ்யராக அமர்ந்து அத்தேசத்து ஞாந சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தார். எகிப்தியர்கள் தம் ஞாந சாஸ்திரங்களை மிகவும் ரஹஸ்யமாகவே வைத்திருந்தார்கள், அந்ய தேசத்தவர்களுக்குக் கற்பிப்பதே வழக்கமில்லை. ஆயினும் நம் பிதகோராஸை மட்டும் முதன் முதல் சிஷ்யராக ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுடைய ஞாநசாஸ்திரங்களை இவர் படித்தார். அவர் எங்கெங்கே யாத்திரை செய்தாலும் அந்தந்த இடங்களில் தத்துவஞாந விஷயங்களை அறிதலிலே கண்ணோக்காய் இருந்தார். இந்தியா தேசத்து பிராஹ்மணர்களிடத்தும், பாபிலோனியாவின் ஸ்வர்ண ஸ்தூபிகளுள்ள கோவில்களின் கண் மாகி (Magi) என்ற குருமாரிடமும், யூதர்களின் பிரமுகர்களிடமும், அரேபிய ஞாநியரிடமும், ட்ரூயிட்ஸ் (Druids) என்ற ஜாதியாரின் ஞாநிகளிடமும் அவரவர்களுடைய ஞாந முறைகளை ஐயந்திரிபற நன்றாய் ஆராய்ந்துணர்ந்தார். மேற்கே வெகு தூரத்திலுள்ள பிரிட்டானி என்ற நாட்டுக்குச் சென்று ட்ரூயிட்ஸ் என்பவர்களைக் கண்டு அவர்களின் குப்த வித்யையையும் கற்றார்.

5. இவ்வாறு 50 வயஸ் வரை இவர் பிரயாணம் செய்து காலங்கழித்தார். இவ்விதம் தாம் ஸம்பாதித்த ஞானக் களஞ்சியத்தை உலகத்தின் பொது ஜநங்களுக்கு தாராளமாய் விநியோகிக்க ஆரம்பித்தார். பிதகோராஸ் கிரீஸ், இத்தாலியா, ஸிஸிலி தேசங்களில் செய்த யாத்திரைகளில் உபந்யாஸம் செய்துகொண்டே சென்றார். இப்படியிருக்குங்கால் கிரீஸ் தேசத்தின் பல நாடுகளின் தலைவர்கள் இராஜரிகத்தின் உத்தரவாதங்களைப் (Civics) பற்றி உபந்யாஸங்கள் செய்யவேண்டுமெனப் பிரியத்துடன் இவரை அழைத்தார்கள். அவர்கள் விருப்பத்திற் கிணங்கி இவரும் பல நகரங்களில் உபந்யாஸம் செய்தார். அந்நகர்களில் (Taoro Menion) டேளரோ மேனியன் என்பது ஒரு நகரம். அதில் அவர் செய்த உபந்யாஸத்தின் முடிவுரை அடியில் வருமாறு :—

“ ஜநங்கள் கூட்டுறவாக நடைபெற ஜநஸமூஹம் ஏற்படுகிறது. அதன் பிரயோஜநம் யாதெனின், ஜநங்கள் ஸுஹிர்தம் பெறலேயாம், சுகமாய் வாழ்தலேயாம். இராஜாங்கம் ஜநங்களின் க்ஷேமத்திற்காக ஏற்பட்டிருக்கிறது. ஜநங்களுக்கு ஸுஹிர்தமும் க்ஷேமமும் பயக்காவிடின் இராஜாங்கம் வேண்டுவதில்லை. குழந்தைகளே! கேளுங்கள், இன்னும் சொல்லுகிறேன். இராஜாங்கத்திற்கும், அதாவது அரசாளும் அதிபதிக்கும் பிரஜைகளான குடிகளுக்கும் உள்ள நேர்மையான முறை இதுவாம். இராஜன் குடிகளுக்குத் தந்தையும் தாயுமாவான், மனைவியை விடவும், கணவனைவிடவும், மிகவும் சுகிர்தம் செய்பவன். குழந்தையைவிடவும் சிநேகிதனை விடவும் மிகவும் அன்பிற் குரியவன். இல்வாழ்க்கை நலம்பெறும்படி அவன் எல்லாரையும் காக்கிறானன்றோ? அவன் காப்பின்றேல் குடும்பம் நாசமுறும். இல்வாழ்க்கை ஏது? கலகமும் குழப்பமும் மலியும். ஒருவனுக்குத் தன்னைப்பெற்ற தாய் உயர்வானவள். தன் அன்பிற் குரியவள். தன் காலைச் சுற்றித் தவழும் குழந்தைகளைப் பெற்ற தன் மனைவி ஸுஹிர்தமானவள். தன் அன்பிற் குரியவள். தாயையும், மனைவியையும், குழந்தையையும் ரக்ஷிக்கும் இராஜன் இவர்களைவிட உயர்வானவன். தன்னுடைய அதிக அன்புக்குப் பாத்திரமானவன். அவனிடம் ஜநங்கள் விசுவாஸம் பாராட்டக் கடவர். இராஜாவின் ரக்ஷிப்பினால் தான் தம்முடைய யோக க்ஷேமங்கள் நன்றாயும் நேர்மையாகவும் நடைபெற இயலும். நம் குடும்பங்களின் அழகும் காப்பும் அரசனின் கார்யம். நல்ல அரசன் ஆளும் நாட்டில் கலை

கள் விருத்தியாகும். அவைகள் ஜனங்களை நல்வழிப்படுத்தும். அவைகளால் ஜனங்கள் அறிவு உயர்ந்திடும். தன் குடும்பத்தைக் காப்பாற்ற ஒருவன் தன்னுயிரைக் கொடுக்க ஸித்தமாயிருப்பானாகில் இராஜாங்கத்தின் பொருட்டு அதிக ஸந்தோஷத்துடன் தன் உயிரைக் கொடுக்க ஸித்தமாயிருக்கவேண்டுமன்றோ?"

6. கி. மு. 530-ல் டோராண்டோ என்னும் குடாக்கடலினோரமுள்ள க்ரோடோனா என்ற க்ஷேத்திரத்தில் பிதகோராஸ் தத்வசாஸ்திரவித்தியாசாலையொன்றை ஸ்தாபித்தார். அவருடைய ஞானஉபதேசம் ஜனங்களுக்கு வெகு ஹிதகரமாயும், யுக்தி அநுபவங்கட்குப் பொருத்தமாயும் ஏற்புடையதாகவும் இருந்தமையால் அநேகர் அவருடைய சிஷ்யர்களானார்கள். பின்பு இவரிருந்த இடத்தில் மதி சம்பந்தமான ஆராய்ச்சிக்கு அநுகூலமாக ஒரு ஸபையையும் ஸ்தாபித்தார். இவர் அதன் தலைவராகவிருந்து அது நலம்பெறும்படி அதை நன்றாய் நடத்திவந்தார். ஜனஸமூஹத்தில் நீதி முறைகளின் சீர்திருத்தம் அமைதலுக்கு உற்ற ஸாதநமாக இச்சபை இருந்துகொண்டு வந்தது. ஆனால் நீதிமுறைகளின் சீர்திருத்தங்களுக்காக உழைப்பவரையெல்லாம், சீர்திருத்தமே வேண்டாம் என்னும் ஜனங்கள் பகைப்பது இவ்வுலகத்தில் ஸஹஜமே. பிதகோராஸின் சிஷ்ய கோடிகள் மேன்மேலும் அபிவிருத்தியடைகிறதையும், அவர்களுடைய ஐகமத்யத்தையும் கண்டு, அத்தேசத்து இராஜாங்கத்தாரே சற்று ஸந்தேகித்து இவர்களால் என்ன கெடுதிநேரிடுமோ எனப் பயந்தார்கள். இவர்களுக்கு அநுகுணமாக இவ்வுயர்நலமமைந்த ஸபையின் பகைவர்கள் இராஜாங்கத்தாரிடம் பிதகோராஸ் இராஜத்துரோகமாக சில கார்யங்களைச்செய்து வருகிறாரென்று, பொய்யான அவதூறுகளை அவர்மேல் ஆரோபணம் செய்தார்கள். இதனால் கல்வியறிவில்லாத மௌட்டியரான சில ஜனங்கள் இவருக்கு விரோதமாகக் கிளம்பி பெரிய கலகத்தை உண்டுபண்ணினார்கள். இவருடைய ஸபையைச் சேர்ந்து ஸந்மார்க்கத்திற் பயின்றுவந்த அங்கத்தினர்களான உத்தமர்களையெல்லாம் உபத்ரவித்தார்கள். கலகக்காரர்கள் பிதகோராஸ் க்ரோடோனாவில் ஏற்படுத்தியிருந்த வித்தியாசாலையை அக்கினிக்கிரையாக்கி அடியோடு அழித்து விட்டார்கள். பிறர் நலம் பெறவேண்டித் தாம்செய்த முயற்சிக்கு இத்தீயர்கள் செய்த கொடுமைகளைக்கண்டு மிகவும் வருந்தி அதிருப்தியடைந்தவராய், மெடபோண்டம் என்ற இடத்துக்குப்போய் அங்கு கொஞ்சகாலம் தங்கியிருந்தார். பிறகு விருத்தாப்பிய தசையடைந்ததும் தன் பிதுரார்ஜித சொத்து

க்களெல்லாம் இருந்த ஸ்வதேசமான ஸாமாஸ் தீவிற்குச் சென்றார். கி. மு. 498-ல் அவர் இவ்வுலகினின்று மறைந்தனர்.

7. பிதகோரஸ் என்பவரே கிரீஸ் தேசத்தில் தோன்றியதற்குப்பின்னர் வெகு ஜன்மங்கள் எடுத்து லோகோபகாரமான கைங்கர்யங்கள் செய்தார். அவைகளின் ஒரு ஜன்மத்தில் (கி. பி. 180-ல்) பௌத்தமததத்துவ சாஸ்திர நிபுணரான நாகார்ஜுநனாகப் பிறந்தார். அவர் நெடுநாளாகப்படித்த படிப்பினாலும், பிறர் நலம் பயக்கும்படியான தியாகமுறை பற்றிய கைங்கர்யங்களைப் பல ஜன்மங்களிற் செய்ததினாலும் அவைகளின் பலனாய் மனித பிரயத்நத்தின் உயர் லக்ஷ்யமான மஹாத்மா என்ற பதவியை இப்போது அவர் அடைந்திருக்கிறார். இப்போது பிரஹ்மஞான ஸபையின் உண்மையான ஸ்தாபகர்களிருவரில் மஹாத்மா K. H. என்ற திருநாமமுடையவர் இவரே. பூர்வ ஜன்மங்களில் அவர் கொண்டிருந்த கல்விப்பயிற்சியின் பற்று இன்னும் அவரிடம் பிரகாசிக்கிறது. இனி அவதரிக்கப்போகின்ற லோககுருவின் வரவை உலகம் அன்புடனும் சிரத்தையுடனும் அங்கீகரிக்குமாறு உலகத்தில் பிரஹ்மஞான ரஹஸ்யங்களைப் பரவச் செய்து, அதனால் உலகத்தை ஆயத்தப்படுத்திக்கொண்டு வருகிறார். அந்த லோககுருவை இதைப் படிக்கிறவர்கள் கண் கூடாக சமீபத்தில் பார்க்கலாம். பிரியமிருந்தால் அவர் வழியில் நடக்கலாம். நீங்களும் மஹாத்மாக்களாகலாம். லோககுருவாகவும் ஆகலாம். ஞான ஒளியால் உலகத்தைப் பிரகாசிப்பிக்கலாம். அந்த கம்பீரமான பதவியைப் பெறுதலுக்கு ஒரே நெறி, ஒரே மார்க்கம் தான் உளது. அம் மார்க்கத்தில் பிதகோரஸ் சென்றார். அதாவது, உண்மையாகவும், ஊக்கமாகவுமுள்ள கல்விப் பயிற்சியும், தன்னை முற்றும் மறந்து செய்யும் பிறர் நலம்பயக்கும் கைங்கர்யமுமாம்.

𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯
𑌵𑌰𑌾𑌨𑍍𑌨𑌿𑌬𑍋𑌧𑌤।
𑌕𑍍𑌷𑍁𑌰𑌸𑍍𑌯 𑌧𑌾𑌰𑌾 𑌨𑌿𑌶𑌿𑌤𑌾 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾
𑌦𑍁𑌰𑍍𑌗𑌂 𑌪𑌥𑌸𑍍𑌤𑌤𑍍𑌕𑌵𑌯𑍋 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿॥

இதன் பொருள்:—"எழுமின், விழிமின், பெரியாரை அணுகுமின், அவரிடம் அறிமின், தெளிமின், தீட்டிய கத்தி முனைபோல் ஸன்மார்க்கம் உள்ளது கஷ்ட ஸாத்தியமானது. ஓம் தத் ஸத்.

ப. நாராயண ஐயர்.

# மரணபயம் வேண்டாம்.

(152-ம் பக்கத் தொடர்ச்சி.)

பூமியில் ஒருவன் ஒவ்வொருநாளும் சூரியன் உதயமாக காலையில் படுக்கைவிட்டு விழிக்கிறான், வஸ்திரம் தரிக்கிறான், அன்று ஏற்பட்ட தொழிலைப் புரிகிறான். சூரியன் அஸ்தமனமாகி இரவு வந்தவுடன் பகலில் அணிந்தவஸ்திரத்தைக்கழற்றிப்போட்டு சிரமபரிகாரமாகத்தூங்குகிறான், பின்பு மறுநாளும் அப்படியே நடத்துகிறான் முந்தியதினத்தில் விட்ட இடத்திலிருந்து தொழிலைச் செய்கிறான். இவ்விதமே ஒரு ஜன்மத்தில், ஜீவன் ஸ்தூலசரீரத்தைப் பெறுகிறான். அந்த ஜன்மத்திற் செய்யவேண்டிய தொழிலைச் செய்கிறான். பின்பு அவன் காலம் முடிகிறது. அணிந்த வஸ்திரமாகிய ஸ்தூல சரீரத்தை, மரணமென்று நாம் சொல்லும் காலத்தில், கழற்றிப்போடுகிறான், சிரமபரிகாரம் பெற நான் முன் பிரஸ்தாபித்த சுகமான நிலைமையை, ஆநந்த நிலைமையை அடைகிறான். அந்த அநுபவ காலம் முடியவே, வேறு புதிய வஸ்திரமாகிய வேறு ஸ்தூல சரீரம் பெற்று இப்பூமியில் மறு ஜன்மம் எடுக்கிறான்.* முன் விட்ட இடத்தினின்று விகாஸமுறைபற்றிய தொழிலைப் புரிகிறான். இதுதான் "விட்டகுறை தொட்டகுறை" என்பதான பழமொழியாக வழங்குகிறது.† ஈசுவரனால் ஏற்படுத்தப்பெற்றிருக்கிற பரிபூர்ண நிலைமையாகிய ஈசுவர ஸாயுஜ்யம் அடையும்வரை ஜீவனுடைய நீடித்த யாத்திரை நிகழும். அந்நிலைமை தான் எல்லை.

30. இந்த விஷயம் உனக்குப் புதிதாய்த் தோன்றும். அதனால் விந்தையாகவும் ஆச்சரியமாகவும் காணப்படும். இந்த விஷயம் வெறும் வார்த்தையன்று. நன்றாய்ப் பரீக்ஷிக்கக் கூடியது. பலர் பலதடவைகளில் பரீக்ஷித்து சித்தாந்தம் பெற்றிருக்கிறார்கள். இத்தச் சிறு வியாஸத்தில், இதன் சாக்ஷியங்களையும் பரீக்ஷைகளையும் விவரிக்கமுடியாது. இதைப்பற்றி ஏராளமான இலக்கியங்கள்

* பகவத்கீதை 9-ம் அத்யாயம் 20, 21, சுலோகங்களைப் பார்க்க.

† பகவத்கீதை 6-ம் அத்யாயம் 40,41,42,43,44,45-ம் சுலோகங்களைப் பார்க்க.

இருக்கின்றனவென்று முன்னரே தெரிவித்தேன். வேண்டுமென்றால் அவைகளைப் படித்து அறிந்துகொள்.

31. இறந்துபோனவர்கள் இருக்கிறவர்களைப் பற்றிக் கவலை கொள்கிறார்களா என்று நீ வினவலாம். சில சமயத்தில் சிலருக்கு அப்படி நேரிடுவது உண்டு. இருக்கிறவர்களைப் பற்றி இறந்துபோனவர்களுக்குக் கவலையேற்படுதல் அந்த லோகத்தில் அவர்களுடைய அபிவிருத்திக்குத் தடையாக ஏற்படும். அவ்விதம் அவர்களுக்குக் கவலையை உண்டுபண்ணாமல் நாம் இருத்தல் வேண்டும். தான் போயிருக்கிற லோகத்தில் தன் கவனம் முழுவதும் பூர்ணமாக நடைபெறும்படியாக, விட்டுப்போன இந்த லோகத்தைப் பற்றிய எண்ணம் அவனுக்கு முற்றும் அறவேண்டும். இவ்வுலகத்திலிருக்கும் காலத்தில் அவனுடைய அபிப்பிராயத்தையும் அவனுடைய யோசனையையும் பாராட்டியவர்கள் அவன் இறந்தமேல் அவனுடைய உதவியை எவ்விதத்திலும் நாடக்கூடாது, மநத்திலும் எதிர்பார்க்கக் கூடாது. தங்களையே நம்பவேண்டும். அவனுடைய அபிப்பிராயத்தையும் அவனுடைய சிந்தனையையும் எதிர்பார்ப்போமானால் அவனுடைய உலகப் பற்றுக்களை விருத்தி பண்ணுவோம். இறந்துபோனவனுக்குக் கவலை ஏற்படாதபடி முயற்சிகிறவர்கள் அவனுடைய குழந்தைகளையும், அவனால் காப்பாற்றப்படவேண்டிய மற்றவர்களையும் ஆதரிக்கவேண்டும். அது நன்மையான காரியம். அப்படிச் செய்வதினால், விட்டுப் பிரிந்தவர்களின் மேலுள்ள கவலை இறந்தவனுக்கு விடும். அது விடவே அவன் மேலேறிச் செல்லும் மார்க்கத்தில் தடையில்லாமலிருக்கும்.

32. உலகத்திலிருக்கும் காலத்தில் முட்டாள்தனமானவும் தெய்வநிந்தை யுள்ளதுமான கீழ்க்கடையான சமய முறைகளை ஒருவன் அநுஷ்டித்து வருவானாகில் இறந்தமேல் தன் கதி என்னவாகுமோ என்ற வீணான பயமும் கவலையும் அவனைத் தொடரும். அந்த லோகத்தில் இத்தன்மைபார்களைக் கண்டுபிடித்து உண்மையாய் நடக்கும் விஷயத்தை அவர்களுக்குத் தெரிவித்து இவ்விதம் உதவிபுரிய அநேகர் இருக்கிறார்கள். இவர்கள் அறிவின்மையான

அந்த பயபக்கத்தினின்று அவர்களை விலக்குவார்கள். இவ்விதம் உதவி புரிகிறவர்கள் இறந்து போனவர்களிலு மிருக்கிறார்கள். உயிருடனிருக்கிறவர்களில் அநேகர் ஒவ்வொரு இரவிலும் தாம் தூங்குங் காலத்தில் இறந்தவர்களுக்கு தைர்யம் சொல்லவும் வீணான பயத்தினின்று விடுவிக்கவும் அந்த லோகத்தின் உண்மைகளைத் தெரிவிக்கவும் இவ்விதமாய் பலவித கைங்கர்யங்களைச் செய்து வருகிறார்கள். எல்லா துக்கமும் அஞ்ஞானத்தால் ஏற்படுகிறது. "பேதைமை மீள துக்கம் மீளும்" என்பது ஆன்றோர் வாக்கு.

33. உலகத்தில் விபஸாகரமானவைகளென்று சொல்லப்படும் சம்பவங்களுள் மிக வாஞ்சையுடன் வளர்த்த குழந்தைகளைப் பெற்றோர்கள் இழத்தல் மிகவும் விபஸாமானதாம். அக்குழந்தையில்லாமல் வெறுமையான இடத்தைப் பார்க்கப் பார்க்கப் பெற்றோர் மநம் துடிக்கும். அதன் சிறு விளையாட்டையும் மழலைச் சொல்லையும் இப்போது காணாமையாலும் கேட்காமையாலும் பெற்றோர்கள் மநவருத்தமுறுவார்கள். அந்த லோகத்தில் குழந்தையின் கதி என்ன? அந்த லோகத்தில் புகுகிறவர்களில் குழந்தைகளின் கதிதான் மிகவும் ஸந்தோஷகரமானது. முன் இருந்தபடியே ஒருவிதமான மாறுதல்களில்லாமல் அவைகள் நடைபெறுகின்றன. பெற்றோர்கள், ஸஹோதரர்கள், ஸஹோதரிகள், கூட விளையாடினவர்கள் எல்லோரும் இப்போது அக்குழந்தைகளுடனிருக்கிறார்கள். நம்முடைய இராக்காலமானது அவைகளுக்குப் பகற்காலமாயிருக்கிறது. இறந்துவிட்டோமென்றாவது, யாதேனு மொருவரை விட்டுப் பிரிந்தோமென்றாவது எண்ணங்கள் அவைகளுக்கில்லை. நம்முடைய பகல் காலத்தில் அவைகள் தனிமையாக வில்லை; ஏனெனில் மற்றக் குழந்தைகளும் கூடுகின்றன. எப்போதும் சந்தோஷமாகவும் விளையாட்டாகவுமே அவ்வுலகம் அவர்களுக்கு நிகழும். இவ்விடத்திலிருக்கும் காலத்தில் பலவிதமான வேஷங்களை கற்பனையால் (இராஜாவாகவும், மந்திரியாகவும், தலைபாரியாகவும், திருடனாகவும்) பாவனை பண்ணிக்கொண்டு விளையாடுகின்றமையை நாம் பார்க்கின்றோம். நுண்ணிய பிரகிருதி திரவியத்தாலமைந்த அந்த லோகத்தில் எண்ணும் எண்ணங்களும், சிந்தனைகளும் ஸ்வரூபங்

களைப் பெறுகின்றன. ராஜாவாக நினைக்கவே ராஜாவாகிறான். மந்திரியாக நினைக்கவே மந்திரியாகிறான். ஒரு அரண்மனையை நினைக்கவே அரண்மனை தோன்றுகிறது. ஒரு ஸைந்யத்தை நினைக்கவே ஸைந்யம் வருகிறது. இறந்தவர்களில் குழந்தைகள் எப்போதும் இவ்விதம் அதிசயமாக ஸந்தோஷமுள்ளவைகளா யிருக்கின்றன.

34. வேடிக்கை விளையாட்டுகளை வேண்டாத ஈசுவர சிந்தனையும் ஈசுவர பக்தியுமுள்ள குழந்தைகள் உண்டு. அவைகளும் தம்முடைய அபீஷ்டங்களைப் பூர்ணமாகப் பெறுகின்றன. தேவ கணங்களும், ஞானிகளும் அந்த லோகத்தில் இருக்கின்றார்கள். இவர்களைப்பற்றிப் புராணங்களில் சொல்லியவை, வெறுங் கதைகளல்ல. யதார்த்தமானவை. இவர்களை நம்புகின்றவர்களுக்கு இவர்கள் தோன்றுவார்கள், மஹாதேஜோமயமாயும், மஹா பிரியமுள்ளவர்களாயு மிருப்பார்கள். இக்குழந்தைகள் எந்தச் சமயத்தில் ஈசுவரனைப் பார்க்க விரும்புகிறார்களோ அந்தச்சமயத்தில் ஈசுவரனைப் பார்க்கலாம். எவ்விதம் ஈசுவரனை நினைக்கிறார்களோ அவ்விதம் ஈசுவரனைப் பார்க்கலாம். எல்லா ஸ்வரூபங்களும் ஈசுவரஸ்வரூபங்களென்றும், அவர் எங்குமிருக்கிறாரென்றும், அந்த ஸ்வரூபங்களாகிய ஈசுவர ஸ்வரூபங்களுக்கு கைங்கர்யமும் உதவியும் புரிகிறவர்கள் உண்மையில் ஈசுவரனுக்கே உதவியும் கைங்கர்யமும் புரிகிறார்களென்றும், இத்தன்மையான உபதேசங்களை சாந்தர்களும், பிரியமுள்ளவர்களுமான ஞானிகளிடத்தினின்று குழந்தைகள் அந்த லோகத்தில் அறிவார்கள். பிறருக்கு உபஹாரம் செய்தலில் குழந்தைகள் பிரியமுள்ளவர்களா யிருக்கிறார்கள். பிறருக்கு உதவி செய்தலிலும், ஆறுதல் சொல்லுதலிலும் மிகவும் உத்ஸாஹமுண்டு. இறந்தவர்களிலநேகர் அந்த லோகத்தில் அறிவிலராய் மயங்குவார்கள். அவர்களுக்கு இக்குழந்தைகள் ஆறுதலையும் தேறுதலையும் அன்பான கைங்கர்யங்களையும் செய்துகொண்டு இவர்களுடன் உல்லாஸமாய் உலாவுவார்கள். கீழ்க்கடையான ஒருவனுக்கு நீ செய்திருக்கிற உபஹாரம் எனக்கே உபஹாரம் செய்ததாக இருக்கிறதென்று பகவான் சொல்லியிருக்கின்றார். இதை அநுஸரித்து இக் குழந்தைகள் கைங்கர்யங்கள் செய்யும்.

35. விளையாடும் பருவத்தை யடையாத குழந்தைகளைப்பற்றி அந்த லோகத்தின் இயல்பு என்ன? அவைகளைப்பற்றி ஒருவிதமான பயமுமேயில்லை. இறந்தவர்களில் எத்தனையோ தாய்மார்கள் இருக்கிறார்கள். அவர்கள் இக்குழந்தைகளைத் தங்கள் சொந்தக்குழந்தைகளைப் போலவே நினைத்து தங்கள் மார்புடன் பிரியமா யணைத்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் மேல் மிகவும் அன்பு பாராட்டுகிறார்கள். ஸாதாரணமாய் இச்சிறு குழந்தைகள் அந்த லோகத்தில் அதிக நாள் தங்குகின்றனவல்ல. திரும்பவும் முன் பிறந்த குடும்பத்திலேயே அதே பெற்றோர்களுக்குக் குழந்தைகளாக ஜனிக்கின்றன. "குழிப்பிள்ளை மடியிலே" என்ற வசனம் இங்கு கவனிக்கத் தக்கது. இதுவரையிலும் நாம் தூங்குங் காலத்தில் இறந்தவர்களுடையநிலைமையைப் பெறுகிறோம் என்பதைப்பற்றிப்பிரஸ்தாபித்தோம். இதுதான் ஸாதாரணமாயும் இயற்கையாயும் நிகழ்வது. நாம் அவர்களிடம் போகிறதை விட்டு இறந்தவர்களை ஸ்தூல சரீரம்பெறவும், அதன் மூலமாய் நம்முடைய ஊனக் கண்களுக்குத் தோன்றவும் செய்வித்தல் கூடும். இது அஸாதாரணமான முறை, விபரீதமானது, அக்ரமமுமானது. ஸன்மார்க்க முறையையநுஷ்டிக்கிறவர்கள் இந்த விபரீதமான முறையை ஏற்றுக்கொள்ளார். இறந்துபோனவர்கள் விகாஸமுறையில் அபிவிருத்தி பெறுதலை இதனால் தடுப்போம். இந்த முறையில் மோசமுண்டு. இறந்து போனவர்கள் பொய்வேஷம் போட்டு வெளியில் தோன்றுவார்கள். அதனால் மோசமுமுண்டு. இதைப்பற்றி விஸ்தாரமாக இப்போது இதில் சொல்ல முடியாது. சில சமயங்களில் இறந்தவர்கள் யாதேனும் ஒரு விஷயத்தைத் தெரிவிக்கவோ அல்லது ஒரு ஆசையைநிறைவேற்றவோ சில இடங்களில் சிலருக்கு ஸ்வேச்சையாகத் தோன்றிடுவர். அந்தச் சமயங்களில் இறந்தவர்களின் விருப்பமின்னதென்று அறிந்துகொண்டு அதை நிறைவேற்றிக் கொடுத்தல் மூலமாய் அவர்களுக்கு மனச் சாந்தத்தை நாம் உண்டுபண்ணவேண்டும். அப்படி நிறைவேற்றிய பிற்பாடு அவர் மறுபடியும் திரும்பார்.

36. மேற்கண்ட விஷயங்களையெல்லாம் நன்றாய்ப் படித்து நீயறிந்து கொண்டாயானால் உன்னுடைய உற்றார், உறவினர், ஸ்நேஹிதர்

இவர்களின் மரணத்தால் வியஸநப்படுவது ஸஹஜமாகத் தோன்றினாலும், அது தவறு என்றும், அது தீது என்றும் நீ அறிவாய். அவ்விததுக்கத்திற்கு நாம் ஆளாகக் கூடாது. இந்த உலகத்தை விட எத்தனையோ பங்கு விரிவானதும் ஸந்தோஷகரமுமான லோகத்திற்கு அவர்கள் போயிருக்கிறார்கள், ஆகையால் அவர்களைப்பற்றித் துக்கிக்க வேண்டியதில்லை. அவர்களின் பிரிவு ஆற்றாமையால் துக்கிக்கிறோமென்றால், அதுவும் சரியன்று. அது மருளினால் ஏற்படுகிறது. உண்மையில் அவர்களை விட்டு நாம் பிரிந்தோமில்லை. மேலும் இறந்து போனவர்களின் க்ஷேமத்தையும் அவர்கள் லாபத்தையும் கருதாமல் சொந்த லாபத்தைக் கருதினவர்களாய் மயக்கத்தினால் அவர்கள் பிரிந்ததாக நினைத்து அழுகின்றோம். எப்போதும் ஸ்வயநலம் பாராட்டாமலிருக்க நாம் முயலவேண்டும். அன்பின் அழகு உண்மையில் பிறர் நலம் பாராட்டுதலிலேயாம். நம்மைப் பற்றிக் கொஞ்சமேனும் நினையாமல் இறந்தவர்களின் க்ஷேமத்தையே கோரவேண்டும். எதைச் செய்தால் அவர்களுக்கநுகூலமாகவிருக்குமோ, அதை நாம் செய்தல் வேண்டும்.

37. அவர்களை நினைத்து நாம் அழுவோமாகில், அவர்களை நினைத்துத் துக்கத்துக்குள்ளாவோமாகில், அதனால் அவர்கள் மநத்தைப் பாதிக்கும் ஓர் இருண்ட மேகத்தை உண்டுபண்ணுவோம். அவர்கள் நம்மேல் அன்பும் ஆதரவும் உள்ளவர்கள், இளகிய மநத்தினர். அதனால் நம்முடைய வியஸநமும் துக்கமும் அவர்களைத் தாக்கும். அவர்கள் அந்த லோகத்தில் மேற்செல்லுதலுக்குத் தடையாக ஏற்படும். ஆகையால் இறந்தவர்கள் பால் உண்மையான அன்பு பாராட்டுவீர்களேயாகில், அவர்கள் பிரிந்துவிட்டார்களேயென்று வீணாக மயக்கங் கொள்ளன்மின். அக்காரணம் பற்றி உண்டாகும் துக்கத்தைத் தவிர்மின். அவர்களுடைய க்ஷேமார்த்தமாக நலம்பல செய்மின். இவ்வுலகத்தின் பற்றுக்களை அவர்கள் விட வேண்டுமென உண்மையாய் விரும்புமின். அவர்களுக்கு மேன்மேலும் நல்லகதி கிடைக்கவேண்டுமெனத் தீவ்ரமாய் நினைமின். நம்முடைய எண்ணங்களெல்லாம் அவர்களைத் தாக்கும். ஆகையால் நம்முடைய எண்ணங்கள் உயர்நலமுள்ளவையாகவும் பிறர் நலம் கருதுகின்றவைகளாகவும், மாசற்றவைகளாகவும் மநத்தைப் புநிதம் பண்ணக்கூடியவைகளாகவும் இருக்கட்டும்.

38. இறந்தவர்கள் நம்மைப்பற்றிச் சில தாங்கலும் கவலையுமு ள்ளவர்களாக இருப்பதற்குக் காரணங்கள் நேரிடும் பக்ஷத்தில், அக் கவலையையும், தாங்கலையும் நிவிர்த்தி செய்யும் பொருட்டு நாம் ஸந்தோஷமுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். இறந்தவர்களை நினைத்து நாங்கள் ஸந்தோஷமுள்ளவர்களா யிருக்கின்றோம். எங் கள் மேல் உங்களுக்குக் கவலை வேண்டாம் எனத் தீவ்ரமாய் உறங் குமுன் மநத்தில் நாம் தீர்மானங் கொள்ளவேண்டும். இவ்வுலகத் திலிருக்குங் காலத்தில் பெரும்பான்மையோர் இறந்த மேல் அந்த லோகத்தின் கதி இத்தன்மையதென்று வியக்தமாய் அறியாதவர்க ளாயிருக்கின்றார்கள். அந்த லோகத்தைப்பற்றி நமக்கு வியக்தமா ய்த் தெரிந்த விஷயங்களை அவர்களுக்கு அறிவிக்கும்படியாக தூங்கு முன் உறுதியான நினைப்புக் கொள்ளுமின். நம்முடைய எண்ணங்க ளும் உணர்ச்சிகளும் உடனுக்குடனே அவர்களைத் தாக்கக்கூடிய வைகளாகையால், அவைகள் எப்போதும் நலமுள்ளவைகளாக இரு க்கவேண்டும்.

39. ஒருமை யுணர்வை நாம் பெறவேண்டும். கடவுள் ஒரு வரே. எல்லோரும் அவரிடம் அடைக்கலம். அவர் அன்பு எங் கும் பரவியது, ஒரேதன்மையது. இத்தன்மையான உணர்வை நாம் பெறுவோமாகில் மோஹமேது, சோகமேது. நமக்குப் பிரிய மானவர்கள் இருந்தாலும், இறந்தாலும், இவ்வுலகத்திலிருந்தாலும், மறுவுலகத்திற்குப் போனாலும் எல்லாரும் அவருடைய ஆதீனத் தில் இருக்கிறோமென்ற உண்மை உணர்வை நாம் பெறக்கடவோம் அன்பால் நிறைந்த கடவுளுடைய பிரபஞ்சத்தில் நாம் துக்கித்தல் ஈசுவர விசுவாஸ மின்மையையும் குடில மநத்தையும், பேதைமை யையும் விளக்குகின்றது, எவ்வளவுக் கெவ்வளவு உண்மையை யறிகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு முழு ஆற்றலும், பூர்ண ஞானமும், பூர்ணகாருண்யமும் உள்ள இறைவனுடைய ஆதீனத்தில், இருக்கிறவர்களும் இறந்தவர்களும் நடைபெறுகிறோம் என்ற நன்னம்பிக்கை மேன்மேலும் அகன்றிடும்.

ஓம் தத் ஸத்

ப. நா,

## கர்மம்.

(160-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

சஞ்சிதமோவெனில் "நான் ஜன்மாந்தரங்களில் அநேககோடி கர்மங்களைச் செய்துள்ளவனாக இருக்கிறேன்" என்னும் வடிவினதாயிருக்கிறது. இதுவும் கர்த்தாரூபமான கரணாதிகளாலியற்றிய ஆகாமியங்களை யெல்லாம் ஒன்றுகூட்டி அகர்த்தாவா யிருக்கிற ஆத்மாவாகிய தானே செய்ததான அநுபவ ரூபமாயிருக்கிறது. இவ்வித அநுபவத்துக்குக் காரணம் அகர்த்தாவாகிய தன்னை அகர்த்தாவென்று தெரிந்து கொள்வதற்குத் தடையாயிருந்த, தன்னையும், பகவானையும் மறைத்த ஓர் மறைப்பு ரூப ஆவரணமே. அவ்வித ஆவரண ரூப அக்ஞானம் உள்ளவரை தான் கர்த்தாவாகவும், அநந்தகோடி ஜன்மங்களில் தான் அநந்தகோடி கர்மங்களைச் செய்துள்ளவனாகவுமிருக்கிறேன் எனக்கொண்டு பந்தத்தை அடைந்தவன் போலாகிறான். ஆகையால் மேற்கூறிய சஞ்சிதமானது இவ்வாவரணரூப அக்ஞானத்தையே ஆசிரயித்துக்கொண்டிருக்கின்றது என்பது வெளிப்படையான விஷயம். எப்போது பிரஹ்மத்திற்கு வேறாகாத ஆத்மாவாகிய தன்னை அகர்த்தாவென அறிகிறானோ அப்போது ஆவரண நஷ்டமும் அதை ஆசிரயித்திருந்த சஞ்சித கர்மங்களும், நான் கர்த்தாவுமல்லன் நான் கர்மங்களைச் செய்தவனுமல்லன் என்ற அநுபவ ரூபமாய் வெந்து நாசத்தை யடைகின்றன. இதுபற்றியே கைவல்ய நவநீதத்திலும்,

> "பஞ்சினை யூழித் தீப்போல் பலஜன்ம விவித வித்தாம்
> சஞ்சித மெல்லாம் ஞானத் தழல்சுட்டு வெண்ணீறாக்கும்"

எனவும், தாயுமானவரும்:—

> "சஞ்சிதமே யாதி சரக்கான முச்சேறும்
> வெந்தபொரி யாகஅருள் மேவுநாள் எந்நாளோ"

எனவும் கூறினமை காண்க.

பிராரப்தமோவெனில் சுகதுக்க அநுபவமே சொரூபமாதலால் சுகதுக்க ஆதாரமான திரிகரணங்களிடத்திலேயே போகத்

தைக் கொடுத்து அதையே ஆசிரயித்துக்கொண்டிருக்கும். எங்கே எங்கே அந்தக்கரணமுண்டோ அங்கேயங்கே சுகதுக்கம், (ஜாக்கிர, சொப்பனத்திற்போல்.) எங்கே எங்கே அந்தக் கரணமில்லையோ அங் கேயங்கே சுகதுக்கமுமில்லை (சுஷுப்தியிற்போல்) எனவரும் யுக்திக ளாலேயே விக்ஷேப ரூப கரணங்களையே ஆசிரயித்துக் கொண்டிரு க்கின்றன வென்பது நன்கு விளங்கும். இதை (பிராரப்தத்தை) விவேகியானவன் திரிகரணங்களிடத்தும், அவிவேகியானவன் தானு கிய ஆத்மாவினிடத்தும் அநுபவிக்கிறான். ஆகவே பிராரப்தமா னது விக்ஷேபவடிவ திரிகரணத்தை ஆசிரயித்துக்கொண்டிருக்கும் என்றதால் அது (விக்ஷேப வடிவ திரிகரணங்கள்) நஷ்டமாகும் போது தானும் நஷ்டமாகின்றது என அறிக. அவ்வாறே பட்டி னத்தடிகளும்:—

"வினைப்போக மேஒரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தால்

தினைப்போ தளவும் நில்லாது"

எனவும், கைவல்லிய நவநீதத்திலும்:—

"விஞ்சிய பிராரப்தத்தின் வினையநு பவித்துத் தீரும்"

எனவும் கூறியவாறறிக. மேற்கூறியவற்றால் ஆகாமியமானது பிரமஜ ஞாதாத்மிய சம்பந்தத்தையும், சஞ்சிதமானதுசொரூபாவரணத்தை யும், பிராரப்தமானது விக்ஷேப ரூப திரிகரணங்களையும் ஆசிரயித்து தத்துவஞானம் உதயமானதும் மூவித கர்மங்களும் ஞானிக்கு நஷ்ட மடைகின்றன ஆனால்பிராரப்தம்மட்டும்கேவலதிரிகரணங்களிடத்து வறுத்தவிதைக்குச் சமானமாய் போக மாத்திரமாயிருக்கிறது என்ற சுருதிகளினபிப்பிராயம் அதிகாரிநோக்கால் கூறப்பட்டதேயொழிய பரமார்த்தமாய் விசாரிக்குமிடத்து ஞானியின் அநுபவத்தில் 3 வித கர்மங்களும் கிடையா. பிரமாணம் பின் வருமாறு;—

𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌶𑍍𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌾𑌃
𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇𑌚𑌾𑌸𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌪𑌰𑌾𑌵𑌰𑍇॥

இதன் பொருள்:—அந்த எல்லாவற்றினும் மேலான பிரஹ்மத்தைக் காணவே (அபரோக்ஷம் செய்யவே) இந்த ஞானியின் இருதயக்கிரந்தி (அகங்கார கிரந்தி) பேதிக்கப்படுகிறது. இவனது சகல சம்சயங்களும் சேதிக்கப்படுகின்றன. இவனது சகல கர்மங்களும் கெடுகின்றன.

பல (பிரயோஜந) வர்ணனம்.

15. மேற்கூறியபடி சாதனங்களைப்பெற்று ஞானத்தையடைந்து ஆகாமியாதி கர்மங்களை நீக்கிக்கொள்ளாத விஷயத்தில் அந்தப் புண்ணிய பாப ரூப ஆகாமியாதி கர்மங்கள் என்ன பலனை யளிக்குமென்னில், எதுகாறும் இவன் பிரயத்தன பூர்வகமாய் ஞான சாதனங்களைச் சம்பாதித்து ஞானத்தை அடையவில்லையோ அதுவரை மேலும் மேலும் புண்ணிய பாபங்களையே செய்து அதினால் பரலோகத்திற்குப் போதலும், இகலோகத்திற்கு வருதலும், கீழ்யோனிகளில் ஜநித்தலுமாக இவ்விதம் மனித ஜன்மம் கர்ம சம்பாத்தியம் செய்யும் ஸ்தானமாகவும், இதற்கு மேலுள்ள மனுடானந்தம் நீங்கிய 10 வித ஆனந்தபோகத்துக்குரிய சரீரங்களிலும், அப்படியே கீழ்உள்ள பசுபக்ஷியாதி அதோ ஜன்மங்களிலும், போக பலனைச் சரீரங்களை எடுத்து எடுத்து இளைத்து ஜனனமரண சம்ஸார சக்கரத்தில் சுழன்று துக்கப்படுவதே பலம் என அறிக.

அப்படியே நம் தாயுமானஸ்வாமிகளும்:—

"அன்றுமுத லின்றைவரை சனன கோடி யடைந்தடைந்திங்
கியாதனையா லழிந்த தல்லால்
இன்றைவரை முத்தியின்றே யெடுத்த தேகம்
எப்போதோ தெரியாதே"

என்று கூறினமை காண்க.

224

முடிவுரை.

16. ஆகவே அக்ஞான காலத்து திரிகரணங்களில் உண்டாகும் செய்கையே கர்மம் எனவும், அதுவே ஆகாமிய, சஞ்சித, பிராரப்தம் என்ற பெயர்களை யடைந்தன வென்றும், அக்கர்மங்கள் நம்மாலேயே ஆரம்பிக்கப்பட்டபடியால் பலனுக்குவருமுன், விதைக்கும்போதோ அல்லது விதைத்த பின்னோ நாமே எப்படி வேண்டுமானாலும் அதாவது மார்க்கண்டேயரைப்போல் இல்லாததைச் சம்பாத்தியம் பண்ணிக்கொள்ள வேண்டுமானாலும், இராவணனைப்போல் இருப்பதில் தீ வைத்துக்கொண்டு சிறிது பாகத்தை வைத்துக்கொண்டது போலானாலும், சசிவர்ணனைப்போல் ஒரேஜன்மத்தில் சம்பாதித்துஅதே ஜன்மத்தில் பூராவும் அழித்துக்கொண்டது போலானாலும் சீர் திருத்திக்கொள்ளலாம் என்றும், அவ்விதமின்றி எனது பிராரப்தம் என்னைக் கெடுத்துவிட்டது, என்னை இவ்விதம் பிரவிர்த்திக்கச்செய்தது என்று கர்மப்பாகுபாடுகள் தெரியாமலே பிதற்றிக் கொண்டு திரிதல் கூடாதென்றும், அவ்விதமின்றி வீண்காலம் கழிப்பின் இச் சரீரம் போய்விடில் இனி மீளுவது துர்லபம் என்றும் விவேகித்து, துக்க நிவிர்த்தியி லிச்சையுடைய ஒவ்வொரு புருஷனும் மேற்சொல்லிய ஆசிரயாதிகளைக் கவனித்து தத்துவ ஞானத்தை எவ்விதத்திலும் அடைந்து மேற் கூறிய மூவித கர்மங்களையும் எரிக்கவேண்டுமென்பதே சகல புருஷர்களின் கடமையாகும் என்பதாம்.

ஓம் தத் ஸத்.

இசக்கியாடும் பெருமாள் பிள்ளை.

# துகாராம் பாவாவின் சரித்திரம்.

(176-ம் பக்கத் தொடர்ச்சி.)



மேலும், துகாராம் முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட கோவிலில் இத்தனை வருஷகாலமாய் விட்டோபாவை சேவித்துக்கொண்டிருந்து இப்போது விட்டுப் போகும்படி நேரிட்டதே என்று கவலை அடைந்து, உடனே இராமேசுவரபட்டரிடம் போனார். போனசமயத்தில் அவர் ஸ்நாநம் பண்ணிக்கொண்டிருந்தார். துகாராம் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, சமயத்துக்குத் தக்கபடி கீர்த்தனங்களைச் சொல்ல ஆரம்பித்தார். அப்போது அந்தப் பிராமணன் சொன்னதாவது :—"நீ ஜாதியில் சூத்திரனாயிருந்தும் ஸ்வயம் கீர்த்தனங்களைச் செய்திருக்கிறாய். அவைகளில் வேதங்களின் அர்த்தம் வெளியாகிறது. வேதங்களின் அதிகாரம் பூர்ணமாய் பிராமணர்களுக்கே இருக்கிறது. அந்த அர்த்தத்தை எடுத்துச் சொல்ல உனக்கு அதிகாரமேயில்லை. ஆகையால் நீ இப்படிச் செய்வது சாஸ்திர விருத்தம் என்று நமக்குத் தோன்றுகிறது. அதிகாரமன்றி சுருதியின் அர்த்தத்தைச் சொல்லுகிறவனும் அதைக் கேட்கிறவனும் ரௌரவ நரகத்திற்குப் போவார்கள். ஆகையால் நீ இன்று முதல் சுத்தமாய் கவநங்களைச் செய்யக்கூடாது" என்றார். இந்த வசனத்தைக் கேட்ட துகாராமருக்கு இது சரி போல் தோன்றி அவர் சொன்னதாவது "மஹாராஜ! நீங்கள் எனக்குக் கேவலம் ஸ்வாமி போலிருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்த உத்தரவை நான் சிரஸால் வகிக்கிறேன். அதற்கு விரோதமாய் நான் ஒன்றும் சொல்லவில்லை. இன்று முதல் நான் எந்த கவநமும் செய்து எழுதி வைக்கிறதில்லை. ஆனால், மஹாராஜ! இதுவரையில் நான் எழுதி வைத்த கவநங்களின் கதி என்ன" என்றார். அப்போது இராமேசுவரபட்டர், "நீ இதுவரையில் எழுதிவைத்த கவநங்களையெல்லாம் கொண்டுபோய் உன் கையாலேயே ஜலத்தில் போட்டுவிடு" என்றார். சரிதான் என்று சொல்லிவிட்டு துகாராம் தன் ஊருக்குத் திரும்பிவந்துவிட்டார். இராமேசுவரபட்டருக்கு கவநங்களை நாசம் செய்வதாய் வாக்கு தத்தம் செய்திருந்தாலும், ஸ்வப்நத்தில் கவநங்களைச் செய்யும்படி பகவானுடைய உத்தரவு ஏற்பட்டிருப்பதால், அவைகளை அழிக்க சுத்தமாக மநம்வரவில்லை. விட்டோபா கோவிலுக்குப் போய் இர-

சங்கட நிவிர்த்திக்காக பகவானைப் பிரார்த்தித்தார். கவநங்களை ஜலத்தில் போடும்படி உத்தரவான சங்கதி ஊரில் தெரிந்தவுடன் இவருடைய சத்துருவான பிராமணர்கள் இவரிடம் வந்து புஸ்தகங்களை ஜலத்தில் போடும்படி சொன்னார்கள். அவர்களும் உபத்திரவித்ததின் பேரில், எல்லா புஸ்தகங்களையும் ஒரு துணியில் கட்டி அதில் பெரிய கல்லையும் வைத்து இந்திரியாணி நதியின் மடுவில் கொண்டுபோய்ப் போட்டார்.

இந்த மாதிரியாக புஸ்தகங்கள் நாசமானதைக்கண்டு ஸத் புருஷர்கள் வெகு வருத்தமடைந்தார்கள்; துஷ்டர்கள் சந்தோஷமடைந்து சொன்னதாவது:—"இவனுக்கு அதிகாரமில்லாமலிருக்க கவநம்செய்து பெருந்தன்மையை அடையப் பார்த்தான். இது எப்படிக் கிடைக்கும்? இராமேசுவரபட்டர் வாஸ்தவமான வித்துவான். அவர் மத்தியில் பிரவேசித்ததினால் ஜநங்களுக்கு உபகாரமாயிற்று. துகாராம் மிகவும் கஷ்டப்பட்டான். உலகத்திற்குச் சாதகமாக நினைத்து எந்தக் கவநங்களை இதுவரையில் செய்தானோ அவைகளுக்கு இந்த கதி வந்ததைக் கண்டு மநம் உருகுகிறான்." ஐந்து திநங்களானபின் சில துஷ்ட பிராமணர்கள் அவரிடம் போய் அவரை இழிவாகப் பேசி, "நீ முன்னே பத்திரங்களை ஜலத்தில்போட்டு உன் பிரபஞ்சத்தை அழித்தாய், இப்போதோ பரமார்த்த புத்தியுடன் செய்த கவநங்களையும் ஜலத்தில் போட்டாய். இப்படி உன் பிரபஞ்சமும் பரமார்த்தமும் இரண்டும் முழுகிப் போன பிறகு நீ ஏன் ஜீவித்திருக்கிறாய், எப்படி ஜநங்களுக்கு முகத்தைக் காட்ட மநம் வருகிறது, உன் ஸ்தாநத்தில் வேறு ஒருவனிருந்தால் அவன் பிராணனையே விட்டிருப்பான்" என்று சொன்னார்கள். ஜநங்களுடைய இந்தக் கடோரமான வார்த்தையைக் கேட்டவுடன் மநஸ் முன்னமேயே உருகிப் போயிருந்தமையால், பிராணனைத் தரிக்கக் கூடாது என்று அவருக்குத் தோன்றிற்று. ஆத்மஹத்தி செய்வது சரியன்று என்று நினைத்து அந்த பாநத்தைத் தள்ளி கோவிலுக்கு எதிரிலிருந்த பிருந்தாவனத்தில் ஒரு கல்லின்பேரில் போய்ப் படுத்தார். அச்சமயத்தில் மநம் வெகு கலக்க மடைந்து அவருக்குத் தெரியாமல் சில கவநங்கள் வெளிப்பட்டன. இவைகளில்

இராமேசுவர பட்டரைத் தூஷித்ததாக யாதொரு வசநமும் ஏற்பட வில்லை. தன்னாலேயே அதர்மம் ஏற்பட்டதாக அவர் நினைத்தது போல் காணப்பட்டது. அவருடைய அபிப்பிராயம் என்ன என்பது மட்டும் தெரியவந்தது. அதாவது ஈசுவர ஆக்ஞைப்படி நடக்க வேண்டியது. அவருடைய ஏற்பாட்டில் யாதொருதோஷமு மிருக்கமாட்டாது. ஸ்வாமியே ஸ்வப்நத்தில் வந்து கவநம் செய்யும்படி உத்தரவு செய்தார். அப்படிக் கவநம் செய்ய, தான் அதிகாரியல்ல வென்பதும் அவருடைய சாஸ்திரமே சொல்லுகிறது. இந்த விரோதத்திற்குச் சமாதானம் விளங்கவில்லை. வெகு மநவருத்தத்துடன் 13 நாள் அந்தக் கல்லின் பேரில் அசையாமல் படுத்துக் கொண்டிருந்தார். அக்காலத்தில் சுத்தமாய் ஆகாரம் எடுத்துக் கொள்ளவில்லை. பழங்களைக் கூட சாப்பிடவில்லை. கண்ணைத் திறந்து ஒருவனுடனும் பேசவில்லை. புருஷனுக்கு வந்த அவமானத்தால் அவலாபாயி அம்மாளும் வீட்டை விட்டு வெளியே வரவில்லை. அந்தப் பதின்மூன்றுநாளில் புருஷனிடம்போய் யாதொரு சங்கதியையும் கேட்கவில்லை. அவருடைய கீர்த்தனங்களில் பிரேமைஅடைந்து அவைகளில் மநோலயமடைந்த சிலர் மநவருத்தத்தால் அவரிடம் கூடப் போகவில்லை. சில பெரியோர்கள் மட்டும் அடிக்கடி அவரிடம் போய் அவரை சமாதானம் செய்ய பிரயத்நம் செய்தும் ஆகாரம் கொடுக்க இச்சித்தும் வருவார்கள். ஆனாலவர்களுடன் அவரொரு வார்த்தையும் பேசமாட்டார். உபவாஸம் செய்யச் செய்ய பிராணன் தானாகவே போகவேண்டும் என்பதாய் அந்ந பாநாதிகளை விட்ட நிச்சயத்தினின்றும் கொஞ்சங்கூட நழுவவில்லை. சுவாஸம் விடுதல் கூட குறைவுப்பட்டு வந்தது. சரீரம் கிருச மாயிற்று. எந்தப் பக்கத்தில் படுத்தாரோ அந்தப் பக்கத்தை மாற்றவில்லை. இவருடைய இப்படிப்பட்ட ஸ்திதியைப் பார்த்து சில துஷ்டர்கள், இவருடைய ஒரு ஸம்ஸாரம் முன் அந்நம் அந்நம் என்று பிராணனை விட்டது போல் இவரும் விடுவார் என்று சொன்னார்கள். துகாராமருடைய ஸ்வாமியே அவரை இரக்ஷித்ததாக நல்ல ஜநங்கள் சொன்னார்கள். இத்தனை நாளாய் அந்நபாநாதிகளைக் கிரஹிக்கா விட்டாலும் அவருடைய தேஜஸ் குறையவில்லை. ஸ்வாமி சகாயம் செய்யா விட்டால் அவருடைய பிராணன் அப்போதே போயிருக்கும்.

கிட்டப்போய்க் காது கொடுத்துக் கேட்டால் அவருடைய முகத்தி னின்றும் நாமபஜநத்தின் சப்தம் நன்றாகக் கேட்கிறது என்று சிலர் சொன்னார்கள். இப்படி யார் யாருக்கு என்ன தோன்றி ற்றோ அப்படியெல்லாம் சொன்னார்கள்.

கடைசியில் 13-வது நாள் விட்டோபா குழந்தை ரூபத்தைத் தரித்து தன்னிடம்வந்து சமாதானம் செய்வதுபோல் துகாராம ருக்குத் தோன்றிற்று. விட்டோபா என்ன சொன்னதாகத் தோன் றிற்றென்றால், "நான் உன்னை எப்போதும் காப்பாற்றுபவனாக இரு க்க நீ சுத்தமாய் சிந்தைசெய்யவேண்டிய காரணமில்லை. உன்னுடைய புஸ்தகங்களை நான் மடியில் வைத்துக்கொண்டு நான் ஜலத்திலிருந் தேன். அவைகள் உனக்கு நாளையதினம் காணப்படும்." இப்படி துகாராமருக்கு மாத்திலுதித்த சமயத்திலே வேறு சிலருக்கும், அதே மாதிரி துகாராமருடைய புஸ்தகங்கள் ஜலத்தில் மிதக்கின் றன, யாராவது அவைகளை வெளியே கொண்டுவரவேண்டும் என்ப தாய்த் தோன்றிற்று. அவர்கள் மறுநாள்காலையில் புஸ்தகங்களைப் போட்டவிடத்தில் பார்த்த சமயத்தில் புஸ்தகங்கள் நனையாமல் ஜலத்தில் மிதந்திருந்தன. அதைக்கண்டு ஜநங்கள் வெகு சந் தோஷப்பட்டார்கள். உடனே பகவந்நாம ஸ்மரணையை பலமாய்ச் செய்ய ஆரம்பித்தார்கள். நீச்சுத்தெரிந்தவர்கள் உடனே இறங்கிப் புஸ்தகங்களை எடுத்துக் கரையேறினார்கள். அவை யாதொரு கெடுதி யையும் அடையாத ஸ்திதியைக் கண்டு பக்தர்கள் வெகு சந்தோஷம டைந்தார்கள். இதைக் கேட்டவுடன் துகாராம் கண்ணைத் திறந் தார். புஸ்தகங்கள் வாஸ்தவத்தில் நனையாமலிருப்பதையும் கண்டார். உடனே சில கவநங்களைச் செய்தார். இந்த ஆச்சரியமான சம் கதி எங்கும் தெரியவந்தது. தூரதேசத்திலிருந்த பெரியோர்கள் தேஹூகிராமத்துக்கு வந்து புஸ்தகங்களைப் பார்த்தும் நகல் எடுத் துக்கொண்டும் போனார்கள். இந்தக்காரியத்தால் அவருடைய கீர்த்தி எங்கும் அதிகப்பட அதிகப்பட துஷ்டர்களுடைய முகம் வாடிப் போயிற்று.

துகாராமருடைய புஸ்தகங்களை ஜலத்தினின்றும் வெளிப்படுத்தும் சமயத்தில் இராமேசுவர பட்டர் பூனவில் நாகநாத ஸ்வாமி தர்சநத்திற்காகப் போயிருந்தார். அக்கோவிலுக்கு அருகாமையிலிருந்த ஒரு தோட்டத்தில் தன் சிஷ்யர்களுடன் பிரவேசித்து அவ்விடமிருந்த குளத்தில் ஸ்நாந சந்தியாவந்தநாதிகளைச் செய்து கொண்டார். அக்குளம் ஒரு சித்தருடையது. தன்னுடைய சொந்த உபயோகத்திற்காக வைத்த ஜலத்தை இந்தப் பிராமணன் கலக்கிவிட்டான் என்று அந்தச் சித்த புருஷன் கோபங்கொண்டு, என் ஜலத்தை எவன் கலக்கிவிட்டானே அவனுடைய சரீரம் முழுமையும் அக்கினி பாதையால் மிக வருத்தப்படட்டும் என்பதாய் சபித்தான். இந்தச் சாபம் இராமேசுவர பட்டருடைய காதில் விழுந்தவுடன் உடம்பெல்லாம் எரிச்சல் கண்டது, அதிக தாஹம் கண்டது. மேல் என்ன செய்கிறது என்று அவர் அறிய வில்லை. அவ்விடமிருந்த ஜனங்கள் அந்தச்சித்தபுருஷனை அடைந்து செய்த அபராதத்தை மன்னிக்கவேண்டுமென்பதாய்க் கேட்டுக் கொள்ள வேண்டியது என்று சொன்னார்கள். இது அவருக்குச் சுத்தமாய் இஷ்டமில்லை. நான் ஜாதியில் பிராமணன். அவனோ துருக்கன், ஹீந ஜாதியில் சேர்ந்தவன். நான் அவனிடம் போகவே மாட்டேன் என்றார். பிறகு ஈரத்துணிகளை மேல் போட்டுக்கொண்டு சிஷ்யர்களை தம்மேல் ஜலம்விட்டுக்கொண்டு வரும்படி சொல்லி வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார். ஆனால் உடம்பு எரிச்சல் விடவேயில்லை. இரவும் பகலும் ஒரேமாதிரியாய்த் தத்தளித்தார். தன் பிராணன் இனி நிற்கமாட்டாது என்று நினைத்தார். இவருடைய ஸ்திதியைப் பார்த்து வெகு ஜனங்கள் வெகு விதமாய்ச் சொன்னார்கள். ஆனால் பலர் துகாராம் சாதுவுக்குச் செய்த உபத்திரவம் தான் இந்தப்பலத்தைக் கொடுக்கிறது என்றார்கள். பிறகு தன்னுடைய வீடு வாசல்களை விட்டு ஆளந்தி பட்டணத்துக்கு வந்து ஒரு பெரிய விருக்ஷத்தின் கீழ் உட்கார்ந்து, இரவும் பகலும் ஞானதேவருடைய தியானம் செய்ய ஆரம்பித்தார். இப்படிச் செய்யச் செய்ய, ஒரு இராத்திரியில் அவர் என்ன ஸ்வப்நம் கண்டாரெனின், மகா பகவத் பக்தரான நாமதேவருடைய அவதாரமான துகாராமரை நீ நிந்தித்தை

அவமானப் படுத்தியதுபோல், உன்னுடைய சுகிர்தமெல்லாம் நஷ்டமாகி, உனக்கு இந்தத் துக்கம் ஏற்பட்டிருக்கிறது. இப்போதாவது நல்ல புத்தியடைந்து அந்த மஹாசாதுவை சரணகதி அடைந்தால் உன் துக்கம் நீங்கும் என்பதாய் ஸ்வப்நம் கண்டார். இந்த ஸ்வப்நம் கண்டவுடன் இராமேசுவர பட்டர் விழித்துக்கொண்டு தான் செய்தது பிழை என்று நினைத்து வருத்தப்பட்டார். துகாராமருடைய புஸ்தகங்கள் 13 நாட்களுக்குப்பிறகும் நனையாமல் வெளிப்பட்டதை அவர் முன்னேயே கேட்டிருந்தார். இப்போது ஞாநதேவருடைய வசநமும் கேட்டார். பிறகு துகாராமருக்கு ஒரு கடிதத்தை பயந்து பயந்து எழுதி தம்முடைய ஒரு சிஷ்யன் மூலமாக தேஹூ கிராமத்துக்கு துகாராமருக்கு அனுப்பினர். அந்தக்கடிதத்தில் துகாராமரை ஸ்துதித்து, செய்த குற்றத்தை மன்னித்து இரக்ஷிக்கவேண்டுமென்பதாய் எழுதியிருந்தது. அந்தப் பத்திரத்தை சிஷ்யன் துகாராமருடைய கையில் கொடுத்து சகல சங்கதிகளையும் தெரியப்படுத்திக்கொண்டார். இந்தத் துக்ககரமான சங்கதியைக் கேட்டவுடன் துகாராமருக்கு மிக்க வருத்தமுண்டாயிற்று. இராமேசுவரபட்டரைப் போன்ற சுசீல புருஷனுக்கு இப்பேர்ப்பட்ட சங்கடம் ஏன் வரவேண்டும் என்று கேட்டார். வாஸ்தவமாய் பார்க்கப் போனல் அந்த பிராமணனுடைய அபராதம் இவர் நினைவுக்கு வந்திருக்க வேண்டியது. அது வரவில்லை. மஹா பக்த சிரோமணியான துகாராமருக்கு சத்துரு, மித்திரர்கள் சமானமாய்விட்டபடியால், அந்தப்பிராமணனுடைய உருக்கமான கடிதத்தைப் படித்தவுடன் அவருடைய மநம் மிகவும் இளகிப் போய்விட்டது. உடனே ஒரு கவநம் செய்து சிஷ்யன் மூலமாய் இராமேசுவர பட்டருக்குக் கொடுத்து அனுப்பினர். அந்த கவநத்தை சிஷ்யன் கொண்டுவந்து கொடுத்தவுடன் இராமேசுவர பட்டர் வாசித்து மறுபடியும் மறுபடியும் வாசித்தார். அப்போது உடம்பு எரிச்சல் கொஞ்சம் கொஞ்சமாய் குறைய ஆரம்பித்தது. இந்த அநுபவம் வந்தவுடனே அந்த இடத்திலேயே துகாராமரை நமஸ்கரித்துச் சொன்னர்:—"நாங்கள் வேதம், உபநிஷத்துக்

கள் முதலிய மஹா கிரந்தங்களை அத்தியயநம் செய்திருக்கிறது வாஸ்தவந்தான். ஆனால் துகாராமிடம் இருக்கும் சாமர்த்தியம் மநுஷியர்களுடையதன்று. அவருடைய புஸ்தகங்களை ஜலத்தில் போட்டிருக்க அவைகள் நனையாமல் வெளிப்பட்டிருந்தால், அவருடைய சாமர்த்தியம் எப்படி இருக்கவேண்டும்." இப்படி ஸ்தோத்திரம் செய்து துகாராமரை தர்சிக்க தேஹூ பட்டணத்துக்குப் போகப் புறப்பட்டார். அவர் வருவதாகத் தெரிந்தவுடன் துகாராம் எதிர்கொண்டு போனார். நடுவில் இருவர்களும் சந்தித்தின் பேரில் இராமேசுவரபட்டர் துகாராமரை மிக்க ஸ்தோத்திரம் செய்து சொன்னார்:—"மஹாராஜ! தாங்கள் பரமவைராக்கிய சீலர், மஹாபகவத் பக்தர். பாமரனான நான் உங்களை அறியாமல் உங்களை வியர்த்தமாய் உபத்திரவித்தேன். அதற்காக என்னை நீங்கள் க்ஷமிக்க வேண்டும்" என்றார். இந்த விநய வசனத்தைக் கேட்டு துகாராம் சொன்னார்:—"நான் எப்படியிருந்தாலும் ஹீந ஜாதியிற் சேர்ந்த மநுஷியன். உங்களுக்கு என்பேரில் எப்போதும் கிருபை இருக்க வேண்டும். இதுதான் உங்களுடைய பாதாரவிந்தத்தில் பணிந்து நான் கேட்டுக்கொள்ளுகிறேன்." இந்த நிஷ்கபடமான வார்த்தையைக் கேட்டு இராமேசுவரபட்டருடைய மநம் மிகவும் இளகி, அவர் சொன்னார்:—"மஹாராஜ! உங்களுடைய ஒரு கவநத்தை நான் வாசித்த மாத்திரத்தில் என் உடம்பு எரிச்சல் நீங்கிப்போய்விட்டது. அந்த ஒரு கவநத்திலேயே என் மநஸ் மாறியிருக்கிறது. உங்களுடைய சன்னிதானத்தை விட்டு என் வீட்டுக்குப் போகவே மாட்டேன். உங்களுடைய பாதார விந்தத்தில் இந்தப் பாமரன் விழுந்திருக்கும்படி உத்தரவு கொடுக்கவேண்டும் என்று சொல்லி துகாராமருடைய காலைப் பிடித்தார். இப்படி அவர் தணிவை அடைந்தார்.

## சிஷ்யவர்க்கம்.

முன் சொன்னபடி துகாராமரிடம் அவருடைய ஜநங்களுக்கு அப்பிரியமிருந்தபோதிலும் நாளாக ஆக அவனுடைய போதனை

யால் அது மாறி அவர்கள் பிரியமுள்ளவர்களானார்கள். அக்கம்பக்கம் கிராமங்களிலுள்ள ஜனங்கள் வெகு ஆதரவுடன் அவரைத் தங்கள் ஊருக்கு அழைத்துக்கொண்டுபோய் பஜனை செய்வித்து வைப்பார்கள். இந்த கீர்த்தனைகளைக் கேட்க வெகு தூரத்தினின்றும் ஜனங்கள் வெகு பிரீதியுடன் வருவார்கள். இவர் செய்யும் போதனையால் அவர்களுடைய சித்தங்கூட மாறி ஸாத்விகமாகும். அவர்தாம் எதைப் போதித்தாரோ அதை எப்போதும் அநுசரிப்பதினாலும், அந்தப் போதனை உலகத்துக்கு ஹிதமாயிருந்தபடியாலும் லகுவாய்ப் பிரகாசித்தது. அவருடைய வாக்கின் சாதுர்யமோ நிகரற்றது. ஆகையால் தான் கவநம் செய்ததைப் பாடும் சமயத்தில் எல்லாருடைய மநமும் அதில் லயமடையும்படியிருக்கும். அவருடைய வசநங்களால் அவரிடத்தில் எல்லாருக்கும் அவர் பரம பூஜ்யராய் விளங்கினர். ஆகையால் இரவும் பகலும் அவருடன் கூடவேயிருக்கவேண்டும் என்று அவர்களுக்குத் தோன்றிற்று. ஆனால் துகாராமருடைய போதனையால் எவர்கள் மநத்தில் வைராக்கிய புத்தி ஏற்பட்டதோ, அவர்களெல்லோரும் ஸம்ஸாரிகளாக இருந்தமையால், அவர்கள் ஸர்வஸங்க பரித்தியாகம்செய்து அவருடனே இருக்க முடியவில்லை. சித்தத்தில் வைராக்கியவிர்த்தி தோன்றினவுடன் அதை அநுசரித்து நடக்க வெகு சிலருக்கே சாத்தியம். அதிலும் ஸம்ஸாரத்திலுள்ள ஸகல சுகங்களையும் தியாகம் செய்து புத்திராதிகளின் பிரியத்தின் பாசத்தை அறுத்து, கேவலம் நிவிர்த்தி மார்க்கத்தை அவலம்பிக்கும் தைரியம் இன்னும் சிலருக்கே வரும். இப்படி தைரியக்குறைவு உள்ளோருக்கு துகாராம் என்ன உபதேசம் செய்கிறார் எனின் :—" சுகமாய் ஸம்ஸாரம் செய்யும், என்னுடைய விட்டலரை நினைத்துக்கொண்டிரும்."

(இன்னும் வரும்.)

A. சிவராவ்.

## பிரஹ்மக்ஞாநதர்சநம். (பாலபாடம்)

(179-ம் பக்கத் தொடர்ச்சி.)

### ௬-வது அத்தியாயம்.

### கர்மம்.

1. கர்மம் என்பது ஸம்ஸ்கிருதபதம். அதற்கு செய்கை என்றுருத்தம். ஒவ்வொரு செய்கையும் ஒரு பயனைக் கொடுக்கிறது, அதாவது ஒருவருக்காவது அல்லது ஒரு வஸ்துவிற்காவது ஒரு வேற்றுமையை உண்டுபண்ணுகிறது. இவ்விதம் கர்மமானது முதலில் ஒரு காரணமாகவும் பிற்பாடு அதன் பயன் அல்லது காரியமாகவுமிருக்கிறது. ஆகையால் கர்மத்தை காரிய காரணமுறை யென்று நாம் சொல்லுகிறோம்.

2. ஒரு கல்லை யெறிவது ஒரு செய்கை. அந்தக்கல் ஒரு கண்ணாடி ஜன்னலில் விழுந்து அதை உடைத்துவிடுகிறது. அவ்விதம் உடைந்ததானது கல்லெறிந்த செய்கையின் பயனும். இது மட்டுமல்ல. உடைந்துபோன ஜன்னல் இனி வரப்போகிற துன்பங்களுக்குக் காரணமாயிருக்கிறது. நீ சேகரித்து வைத்திருந்த பணம் ஜன்னலை மராமத்து செய்வதில் செலவாய்விடுகிறது. அந்தப் பணமோ உன் தாயாருக்கு அல்லது சிநேகிதனுக்கு ஒரு பதார்த்தம் வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று நீ ஆசைப்பட்டுச் சேர்த்துவைத்தது. அந்தப் பதார்த்தம் வாங்கிக்கொடுக்க இதனால் முடியாமற் போய்விட்டது. இந்தக் காரியத் தவறு நேரிட்டதே என்ற உணர்ச்சிதான் உனக்குண்டான பலன். இதினால் உனக்கு சஞ்சலமும் கோபமும் உண்டாகும்? நீ மஹா ஜாக்கிரதை யுள்ளவனா யிருந்தாலொழிய இக்காரியத் தவறினாலும் கோபத்தாலும் நீ வேறொரு தப்பிதமான காரியத்தைச் செய்வதற்குக் காரணமாயிருப்பாய். இப்படி வெகுதூரம் போகும் செய்கையின் பயனுக்கு முடிவில்லை. கர்மத்துக்கும் முடிவில்லை. நாம் விவேகிகளாகும் போது எவ்வித செய்கைகள் நன்மையைப் பயக்குமோ அவ்வித செய்கைகளையே செய்ய ஜாக்கிரதையாயிருப்போம்.

3. ஒவ்வொரு செய்கையும் முதலில் காரணமாகவும் அப்பால் காரியமாகவும் ஆகும். அந்தக் காரியமே வேறொரு செய்கைக்குக் காரணமாயிருந்து அதைச் செய்விக்கும். ஆகையால் பிறருக்கு நன்மையும் உபகாரமுமான செய்கைகளைச் செய்தால் இந்தக் காரணங்களிலிருந்து அநேக நல்ல காரியங்களுண்டாகி அன்பும் நன்மையும் நிறைந்த சங்கிலிக் கோவையாக வளர்ந்து உலக முழுவதும் சுற்றிச்

கொண்டு நமக்கு அநுக்கிரஹம் செய்கிற நல்ல கர்மமாக நம்மை வந்தடையும். அப்பால் இதைவிட அதிக நல்லதும் பெரிதுமான சங்கிலிக் கோவையை உண்டுபண்ண நமக்கு அதிக பலத்தைக் கொடுக்கும்.

4. ஏரியில் ஒரு கல்லை யெறிந்து அதன் பயனைச் சற்று கவனித்துப்பார். முதலில் தண்ணீர் துள்ளி மேற் கிளம்புகிறது. கல் லடி விழுந்த இடத்தைச் சுற்றி அநேக சிறிய வட்டங்கள் உண்டாகின்றன. அவ்வட்டங்கள் வர வர விசாலமாகின்றன. இன்னும் அதிக விசாலமாகும்போது நமது கண்களுக்குப் புலப்படுகின்றன வல்ல.

5. அவைகள் மென்மேலும் விசாலமாகி கடைசி வட்டமானது ஏரியின் கரைகளில் அற்பமான சிறு அலையை உண்டுபண்ணுகிறது. அச்சிறு கல் ஏரியிலுள்ள தண்ணீரின் ஒவ்வொரு திவலையையும் அசைத்தது. இத்துடன் அதன்வேலைமுடியவில்லை. ஏரியின் கரைகள் கெட்டியாயும் இடிந்து போகாமலு மிருக்கின்றன. அந்தக் கரைகள் அச்சிறு அலையைத் திருப்பி யனுப்புகின்றன. ஆனல் அதின் பலம் அநேகமாய்ச் செலவழிந்துவிட்டபடியால் சாந்தமாய்த் திரும்புகின்றது. மறுபடியும் தண்ணீர் பின்னல் சென்று இக்குழப்பத்தை யுண்டுபண்ணின கல்லைத் தாக்குகின்றது. ஆனல் அக்கல்லானது ஏரியின் அடியில் அசைவற்றிருக்கிறது. இப்போது திரும்பி வருகிற தண்ணீருக்கு யாதொரு தடையு மில்லாததினல் கல்லுக்கு மேலேயும் அதைச்சுற்றிலும் மெதுவாயும் சாந்தமாயும் அமைகின்றது.

6. மேற்சொன்ன கல் விஷயமாய் அலைகள் எப்படிச் செய்தனவோ அப்படியே நம்முடைய செய்கைகளின் பலன்கள் நம்மையடைகின்றன. அப்பலன்களின்பேரில் நாம் கோபங்கொண்டும் கோபத்தினல் அவைகளை ஒழித்துவிடவும் முயலுவோமாகில் கர்மத்துக்கு நூதந அலைகளை உண்டாக்குகிறவர்களாவோம். அவ்வலைகள் நம்மேல் திருப்பியடித்து நம்மைக் கலக்கும்.

7. நாம் பக்ஷ முள்ளவர்களாயிருந்து சாந்த குணத்தை வகிப்போமாகில் திரும்பி வருகிற துன்பமுள்ள அலைகள் வர வர மெலிந்து கொஞ்சங் கொஞ்சமாய் அடங்கிப்போம். ஆனல் அவைகள் நேராய்த் திருப்பிக் கடைசிவரை நம்மிடம் வராமற் போகா.

8. இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ளுவது கடினம். ஆனல் உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் அதைக் கற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆகையால் அப்பாடத்தைக் கற்றுக்கொள்ள நாம் இப்போதே ஆரம்பிக்கவேண்டியதுதான் புத்திசாலித்தனம்.

இன்னும் வரும்.

வி. வெங்குசாமி ஐயர்.

# பெரியார்மாட்டு தீமைசெய்ய நினைத்தல் தனக்கே துன்பம் தரும்.



இவ்வுண்மை ஜடபரதர் என்னும் மஹாமுனிவரது சரித்திரத்தின் ஓர்பகுதியால் விளங்கும். அஃது அடியில் வருமாறு ஸ்ரீமத்பாகவதத்தில் கூறப்படுகிறது. இம்மகாபுருஷன் பூர்வஜன்மத்தில் மானாகி அவஸ்தைப்பட்டு, அதுநீங்கிப் பின் மறுஜன்மத்தில் அங்கிரஸவம்சத்தில் உத்தம பிராமணன் ஒருவருக்கு இரண்டாந்தாரத்தின் கனிஷ்டபுத்திரனாய்ப் அவதரித்தார். இந்தஜனனத்தில் பூர்வஜன்மாதி ரஹஸியங்களை நன்குணர்ந்தவராய், உலகப்பற்றை முற்றுமொழித்தவராய், பைத்தியங்கொண்டவரெனப் பார்ப்போர் மதிக்கும்படி தன்னந்தரங்கமான பிஹ்மநிஷ்டையில் கலந்து, தனக்கெனவோர் விருப்புமின்றி எவருடைய ஏவுதலாலும் எதையும் செய்பவரும், எத்தகைய வுணவு கிடைப்பினும் அதை யுண்பவருமாகிக் காலங்கழித்து வந்தனர். இவருடைய ஜ்யேஷ்ட சோதரர்கள் இவருக்கு வித்தியாப்பியாசம் முதலியன செய்விக்க எவ்விதம் முயன்றும் பயன்படவில்லை. கடையில் இவர்க்கு பயிர் நிலமொன்றில் வேலையிட்டு அதையும் செய்வித்து வந்தனர். அவ்விதம் நிகழ்கையில் ஒருநாள் சமீபத்தில் இருந்த ஒரு கிராமத்தில் வசித்த சூத்திரஜாதியானாகிய ஒருபிரபு தனக்குக் குழவிச்செல்வம் இல்லாமையால் வருந்தி பத்திரகாளிதேவிக்கு ஒரு நரபலிகொடுப்பதாய் வேண்டுதல் செய்துகொண்டதால், அவனது ஏவலாளர் அம்மானிட பசுவுக்காக எங்குந்தேடிக் காணாமல் முடிவில் நடுராத்திரியில் பயிர்நிலக்காவலிலிருந்த ஜடபரதரை இன்னாரெனவறியாமல் சரியான நரபசுவெனக்கருதி, கயிற்றால் அம் மகாபுருஷனைக்கட்டி பத்திரகாளியினாலயங்கொணர்ந்து சேர்ப்பித்தார்கள். பிறகு பலிகொடுக்கப்படும் பசுவுக்கு ஸ்நாநம்செய்வித்து சிவந்த உடைகள் மாலைகளைத் தரிக்கச்செய்து இன்னுமவர்க்கு ஆபரணம், சந்தனப்பூச்சு முதலியவற்றால் அலங்காரம்செய்து, உணவு ஈந்து, பின்னர் மிருதங்கம், கொட்டு, பாட்டுகள், ஸ்தோத்திரங்கள் இவற்றுடன் கூத்துகளாடி காளிகாதேவியைக் கொண்டாடுவோர்களாயினர். முடிவில், காளிதேவியின் மந்திரத்தால் உருவேற்றப்பெற்றதும் மிகவுங் கூர்மையாய்த் தீட்டப்பட்டதுமான நீண்ட பட்டாக்கத்தியொன்றை யஜமாநனாகிய பிரபு கையிலெடுத்து ஓங்கி, நரபசுவாய் அமைந்து நிற்கும் அம்மகாபுருஷனது செங்குருதியால் காளிக்கு திருப்திசெய்ய வுத்தேசங்கொண்டு அவரை வெட்டத் துணிந்தனன். அந்தோ! ரஜஸ்தமோ

குணங்களே நிறைந்து காமக்குரோதாதிகளின் வசப்பட்டாழ்ந்திய மனமுடையோராகி ஹிம்ஸையே தொழிலாயமர்ந்த அவ்விழிய்குலத்தோரின் கொடுமையை என்னென்றுநினைப்பது! கடவுளின் வீர்யாம்சமாகிய தேவதைகளை தூரத்தம் செய்துகொண்டு கெட்டவழிகளில் மநம்போனபடி நடப்பவர்களான இப் பாபிகள் சாக்ஷாத் மகரிஷியின் புத்திரரும், பிரஹ்மவடிவமேபாகி நிர்வைரராயும் சகலபூதங்களின் மித்திரராயும் விளங்குபவரான இப் புண்ணிய புருஷனிடத்திலும் தங் கொடுந் தொழிலைப்புரிய ஆயத்தப்பட்டனரன்றோ! இஃதை யறிந்த காளிதேவியும் அம் மகாமுனிவரின் தாங்கமுடியாத பிரஹ்ம தேஜஸால் தகிக்கப்பட்ட தனது சரீரத்தோடும் உடனே திடீரென அங்கு தோன்றினள். அடங்காச்சினத்தால் படபடவென அதிர்ச்சி கொண்ட புருவமும், பயங்கரமானவளைந்த கோரப்பல்லும், தீயைப் போற் சிவந்த கண்களும், துடிதுடிப்புடைய வாயினுதடுகளுமுடையவளாய், அகண்டமுகடுகளும் எதிர்ஒலி செய்யும்படி உரத்த அட்டஹாசம் செய்து, தனது சிலையுருவத்தைவிட்டுக் குதித்து வெளியேறி, மூற்கூறிய அந்தப் பட்டாக்கத்தியாலேயே அப்பாபிகளின் தலைகளை வெட்டித்தள்ளி, கழுத்துகளினின்றும் பொங்கிவழியுமிரத்தங்களை தன்கணங்களுடன் குடித்து, அப் பெருங்குடியால் வெறிகொண்ட தன்னினங்களோடும் பேராரவாரத்தோடும் குதித்து, பாடி, அவர்கள்தலைகள் யாவையும் பந்துகளாக்கி விளையாடி மறைந்தனள்.

இவ்விதமே பெரியோர்களிடம் செய்யும் துன்பரூபமான எவ்வித அபகாரமும் முடிவில் செய்வோனுக்கே முழுமையும் பலிக்கின்றது. இஃது ஆச்சரியமாகுமோ? ஏனெனில், தன் தலையிழக்க நேர்ந்ததருணத்திலும் தன் தேஹாதிகளில் முற்றிலும் அபிமானமிழந்தவரும், நிர்வைரரும், சகல ஜீவராசிகளிடத்து மன்புபூண்டவரும், கடவுளால் பற்பலவிதங்களாகக் காப்பாற்றப்படுபவரும், பயம் முற்றிலுமற்ற வாழ்வாகிய பரமான்மாவின் பாத மூலசேவையை முழுமனத்துடன் சரணமாய் அடைந்தவருமான ஜடபரதராகும் இம் மஹாநுபாவர்விஷயத்தில் அபசாரம்புரியும் அறிவிலர்க்கு இக் கேடமைதல் அதிசயமாகுமோ? ஆகாதன்றோ! பெரியர்ர் பொறுத்துக்கொண்டு மௌனமாக இருக்கிறரென்று எண்ணவேண்டாம். அவர்களுடைய சகிப்பு தீமைபுரிபவனுக்கு காளியின் பட்டாக்கத்தி போன்றதாகும்.

ஆர். சுந்தரராஜ ஐயர்.

## புத்தகவரவு.

திருக்குறள் வசநம்:—இஃது ஓர் அருமையும் அவசியமுமான நூல் நந் தமிழுலகத்திற்கோர் பெரு நிதியமென விளங்கும் சமரசஞானப் பெருங் களஞ்சியமாம். திருக்குறட் பிரபந்தத்திற்கு அரும் பெரும் உரை நூல்கள் பல பூர்வாசிரியர்களால் இயற்றப்பட்டிருப்பினும், அவையாவும் ஆழ்ந்தகன்று நுண்ணியதாம் கல்வித்திறமடைந்தோர்க்கன்றி யேனைய தமிழ் மாந்தர்க்குப் பயன்படாவாகையால், இக்காலத்திற் கிட்டும் சொற்பத்திறனைக்கொண்டு தமிழ் கற்கும் மாணக்கர்க்கும், மற்றும்பலர்க்கும், ஆழ்ந்த கல்வியுடையோர்க்கும் சமயம் வந்துழி தாம்வருந்திக் கற்றவற்றை புநராலோசனை செய்தற்கும், மிகப்பயன் படுவதாகிய பேருபகாரம் இஃதாகும். திருக்குறளின் உரையாசிரியர்களுக் குள் நாயனாரின் கருத்தையே யுள்ளபடி யறிந்தவரென ஆன்றோர் புகழும் பரி மேலழகரின் உரையையே முழுதும் தழுவி இவ்வசநம் இயற்றப்பட்டிருப்பது ஒரு பெரிய நன்மை. உயர்ந்த கடிதத்தில் சிறந்த பதிப்பில், சரசமான விலையு டன் வெளி வந்திருக்கின்றது. இதன் விலை ரூ 1—4—0. ஆதலின் இதனை எத்தகை மாண்புடையோரும் வாங்கிப் படித்தின்புறுவதே கடமையென மதிக் கின்றனம். இப்புத்தகம் வேண்டுவோர் மதுரை விவேகபாநுப்பிரஸில், மது ரைத் தமிழ்ச்சங்க வித்துவான் மு. ரா. அருணசலக்கவிராயரவர்களுக் கெழு திப் பெற்றுக்கொள்ளலாம்.

———

புட்பபந்தம்:—இப்பெயரிய சிறுபுத்தகம் ஒன்று வரப்பெற்றோம். இஃது திதியின் காலவளவு, காற்றுக்குறி, மின்னற்குறி, மழைவளத்தின் அளவு, கால மிவற்றைக் காட்டும் சோதிட சாத்திரத்தைச் சேர்ந்த ஓர் அரிய நூல். வட மொழியினின்றும் மொழி பெயர்ப்பாகும். வியவசாயத் தொழில் புரிவோர்க் கும் மற்றோர்க்கும் பிரயோசனப்படும்படி பரங்கிப்பேட்டையிலிருக்கும் தமிழ் வித்துவானும் பென்ஷன் ஓவர்சியருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ ப. அ. லக்ஷ்மணப் பிள்ளையவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு மேற்படி யூர் மகா-ா-ா-ஸ்ரீ சு. அ. குமாரசுவாமியாசாரியா ரவர்களால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. விலை அணு நான்குதான்.

**தாராவதி:**—இஃது, ஓர் நற்குடியிற் பிறந்தும் துர்நடத்தை யெய்திய பெண்ணின் சரித்திரமாகிய கட்டுக்கதை. ஆரம்ப முதல் வெகுநாள்வரை புத்தியில் நல்ல நினைவு தோன்றினும் அவற்றை மீற விடாது துர்க்குணமே விளங்கிய நடத்தையொடு காலங்கழித்து கடைநாளில் ஏதோ சொற்ப பாக்கிய விசேஷத்தாலோ அல்லது பூர்வ ஜன்மங்களினின்றும் எஞ்சி நின்ற புண்ணியத்தின் பலத்தாலோ, ஒரு பெரியோரை யடுத்து, தபஸ்வினீயாகினாளென்று இக்கதை முடிவு பெறுகின்றது. கதையின் அடிமுதல் கடைவரை படியாதவர் கதாநாயகியின் சரிதத்தைச் சிறிதறிந்தவுடன் அவளது துர்க்குணத்தைக் கேட்டமட்டில் வெறுப்புற்று மேலும் படிப்பதற்கு அஞ்சி அவ்வளவில் புத்தகத்தைக் கீழே வைப்பரெனவே தோன்றுகின்றது. சரித்திரம் எளிய தமிழ்நடையில் அழகாய் வரையப்பட்டிருக்கிறது; விலை அணா 12. வேண்டுவோர் C. M. ராஜு அவர்கள் M. B. P. I. ராஜண்டேல், வால்டாக்ஸ்ரோட், சென்னை என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

**நமது சிறிய சத்துருக்கள்** (அவையாவன, **நமக்கு பிளேக்** முதலிய **கொடிய வியாதிகளை உண்டு பண்ணக் கூடிய, கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய கருக்களாம்**):—இந்தத் தலைப் பெயருள்ள புஸ்தகம் ஒன்று நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இது கும்பகோணம், வைத்திய போதிநீ பத்திராதிபரவர்கள் மகா-ள-ள-ஸ்ரீ டாக்டர் எஸ். சந்திரசேகரர் அவர்களால் இயற்றப்பெற்றது. இது பிளேக், காலரா, விஷ ஜுரம் முதலிய வியாதிகளின் உற்பத்தி விவரங்களையும் அவ் விஷநோய்களுலாவுங் காலங்களில் நாம் அநுஸரிக்கவேண்டிய சுகாதார விஷயங்களையும் நன்கு விளக்கிக் கூறுகின்றது. இப்புத்தகத்தின் ஆசிரியரே முன்னர் "மானிட ஜீவிய சிந்தாமணி" என்றொரு அருமையான நூல் இயற்றியுள்ளார். இவ்விரண்டு புஸ்தகங்களும் ஜனஸமூகத்திற்கு வெகு பிரயோஜநகரமானவைகளே. பிரகிருத புஸ்தகத்தின் விலை அணா 6 தான். இப்புஸ்தகம் வேண்டுவோர் கும்பகோணம் மேற்படி டாக்டரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

---

# சமாசாரம்.

சென்ற மாதம் 20, 21 தேதிகளில் பிரஹ்மக்ஞாந சபையின் தலைமை ஸ்தானமாகிய ஆதியாற்றின்கண், பிரஹ்மக்ஞான சமாஜத்தின் அந்தரங்கசபையினர் பலர் சென்னபட்டணம் ராஜதானி, ஐதராபாத் இப்பிரதேசங்கள் முழுமையினின்றும் பலவிடங்களிலிருந்து வருஷந்தோறும் நடைபெறும். இவ்வந்தரங்க சங்கத்திற்கு வந்திருந்தனர். இவ்வருடத்தில் 6 மீட்டிங்குகள் நடத்தப்பெற்றன.

காலவியற்கையும் பலவூர்களினின்றும் வந்திருந்த கனவான்கள் கூடி வியவஹரிப்பதற்கேற்றபடி மிகக் கொடுமையான வெயிலில்லாமலும் மழையில்லாமலு மிருந்தது.

மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரும் ஸ்ரீமான் லெட்பீடரும் மகிழ்வுற்ற மநத்துடன் அருமையான பலமொழிகளையும், ஆங்காங்குள்ளோர் மநத்தின்கண்ணெழுந்த பலவினாக்களுக்கு விடைகளையும், யாவரும் வியப்புற்று ஆநந்திக்குமாறு அமுதவாரியெனப் பெய்தார்கள்.

உலகமாம் பெருமாயையுளாழ்ந்து, அடிக்கடி உறுதியிழந்து, மநமலையா விடத்தடையப் பெறும் ஞானவாராய்ச்சியின் உண்மை யநுபவத்தை யடைதற்கில்லாத நண்பர் யாவரும், இச்சமயத்தில் க்ஷணமாத்திரப் பொழுதாயினும் சந்தேக விபரீதமற்று ஆநந்தத்தில் மூழ்கினார்கள். எவ்வகையாலும், இம்மகா சபையும் இதன்காரியங்களும் உலகஸம்ரக்ஷகர்களான மகரிஷிகளின் கருணையாலன்றி வேறெவ்விதத்தாலும் நடைபெறுகின்றனவல்ல என, அன்பு, பொறுமை, சிரத்தை, இந்நற்குணங்கள் வாய்ந்த யாவருள்ளத்திலும் தெளிவாய் விளங்கிற்று. இங்கு கூடிய கனவான்களிற் சிலர், ஆலோசனை செய்து வருஷந்தோறும் ஈஸ்டர் (Easter) விடுதி நாட்களில் அந்தரங்க சபையொடு பகிரங்க கூட்டமொன்றும் சேர்ந்து, இவ்விடம் ஆதியாற்றில் ஒருங்கே சர்வஜநங்களின் உபயோகத்திற்காக நடத்தப்படவேண்டுமென தீர்மானம் செய்திருக்கின்றனர்.

பின்னும் இச்சமயத்தில் நம்மிந்து சமயத்தினர் யாவரும் க்ஷேமமுறவும், நமது நாட்டில் ஐகமத்தியம் தழைத்து சகலவிதமான மேம்பாடும் சிறப்புற்றோங்கி விளங்குவதற்கும், இன்றியமையாதனவான பலவித சீர்திருத்தங்களும் ஆலோசனை செய்யப்பட்டன. இவற்றை யிவ்விடம் விரிவிஞ்சி விடுத்தாம்.

நாகரிகம் முதிர்ந்த எல்லா தேசஸ்தர்களும், தம் ஜனஸமூஹத்தில் அவசியமான விஷயங்கள் ஏதேனும் எல்லோராலும் கைக்கொள்ளப்படவேண்டுமென்று உணர்வாராகில், முதலில் அவ்விஷயங்களைப் பள்ளிக்கூடங்களில் பாலர்களுக்குக் கற்பிக்கிறார்கள். 'இளமையிற் கல்' என்ற முதுமொழிக்கிணங்க பால்ய காலம் தான் எத்தகைய வித்யாப்யாஸத்திற்கும் உரிய காலம். இவ்வுண்மையுணர்ந்தே, பிரஹ்மக்ஞான ஸபையாரைச் சார்ந்த வித்யாபிவிருத்தி ஸங்கம் (Theosophical Educational Trust) நம் சிறுவர்களுடைய, முக்கியமாய், நீதி முறைபற்றிய ஒழுக்கத்தை வாலிபகாலம் முதலே நேர்மைப்படுத்தி, அவரவர்களின் மாத்ரு பூமிக்கு நல்ல புத்ரர்களாக அமைக்கும் வண்ணம், புதிய கலாசாலைகளை ஸ்தாபித்து வருகின்றது. இந்த வித்யாபிவிருத்தி சங்கத்தின் கீழ் 'மதநபள்ளியில்' ஒரு வித்யாசாலை பேர் பெற்று நடைபெறுகிறது. தற்கால உபாத்தியாயர்கள் தம்முடைய உத்யோகத்தை ஒரு ஜீவனோபாயமாகக் கொள்ளாமல் "கல்வி கற்பித்தல் ஈசுவர கைங்கர்யம்" என்ற பாவனையுடன் நஞ்சிறுவர்கள் முன் உயர் லக்ஷ்யங்களை அமைப்பாராகில் நந்தேசம் வெகு சீக்கிரம் நலம் பெறும் என்பதற்கையமில்லை.

---

மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையார், நந்தேசத்து ஐக்கிய மாகாணங்களில் (United Provinces) காலஞ் சென்ற ஏ. ஒ. ஹ்யூம் (A. O. Hume) என்பவரின் ஞாபகச்சின்னமொன்றேற்படுத்துவதற்காகச் சேகரிக்கப்பெறும் நிதிக்கு ரூ. 300 நன்கொடை யளித்திருக்கின்றனர்.

---

ஆகாயக் கப்பல்களின் உதவியால் ஆகாய மண்டலத்தில் மேற்சென்று சுத்தமான காற்றை உட்கொண்டு க்ஷயகாச (Tuberculosis) வியாதியால் வருந்துபவர்கள் வெகு சீக்கிரத்தில் சௌக்கியம் பெறலாமென்று லிப்டெனண்ட்கர்னல் J. D. N. டோனிகன் ஆர். ஏ. எம். ஸி. (J. D. N. Donegan R. A. M. C.) என்பவர் கூறுகிறார். இப்போது ஆகாயக்கப்பல் ஆகாய மண்டலத்திலேயே ஸ்திரமாய் நிற்கும்படி நங்கூரம் போடும் உபாயமொன்று கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இன்னும் கொஞ்சகாலத்தில் க்ஷயகாசரோகமுள்ளவர்களையும் இன்னும் இதர வியாதிஸ்தர்களையும் நிச்சயமாகவே ஆகாயக்கப்பல்களில் ஏற்றிக்கொண்டு உயரப்பறந்து சுத்தமான காற்றை சுவாசிக்கும்படிசெய்து பிறகு ஸாவதானமாய் வியாதிஸ்தர்களை ஆஸ்பத்திரியில் அவரவர் ஸ்தானத்தில் கொண்டுவந்து சேர்ப்பிப்பதும் அநுஷ்டானத்திற்கு வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கலாம். பத்து வருஷங்களுக்கு முன், உயரப் பறக்கக்கூடிய ஆகாயக் கப்பல்களும் நிர்மிக்கப்படுவது ஸாத்தியமோ! என்று தான் நாம் எண்ணியிருந்தோம். இப்போது 1 நாளுக்கு 830 மைல் தூரம் ஆகாயக்கப்பலின் மூலமாய் ஏறிப் பிரயாணிப்பதை பிரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். மேற்சொன்ன, வியாதிஸ்தர்களை சௌஸ்தப்படுத்தும் முறை இன்னும் கொஞ்சகாலத்திற்குள் சித்திப்பதை நாம் அறிவோம்.

பத்திராதிபர்.